DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
உதயன் சிவராஜா
ROYAL LEPAGE ignite
795 MILNER AVE, TORONTO, ON M1B 3C3

DOMINION LENDING CENTRES
✓FIRST MORTGAGE
✓SECOND MORTGAGE
✓REFINANCE
SUJAN SIVARAJAH MORTGAGE AGENT LEVEL 1 416.302.5555

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
HomeLife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1594 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 23, 2026

## ஸ்காபுறோவில் "விஜயா யுவல்லறி" நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் இசை நிகழ்ச்சியும் "அவுடி" சொகுசு வாகனம் ஒன்றை வெல்லப்போகும் அதிஸ்ட குலுக்கல் நிகழ்வும் ஒரே மேடையில்"

ஸ்காபுறோவில் நன்கு அறியப்பெற்ற "விஜயா யுவல்லறி" நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் மாபெரும் இசை நிகழ்ச்சியும் "அவுடி" சொகுசு வாகனம் ஒன்றை வெல்லப்போகும் அதிஸ்ட குலுக்கல் நிகழ்வும் ஒரே மேடையில் எதிர்வரும் 24-10-2026 அன்று ஒஷாவா நகரில் அமைந்துள்ள **CANADA EVENT CENTRE** மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**MAKKA Live in Toronto**-2026 "இசை நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெறும் வகையில் ஆயுமுமுயு இசைக்குழுவின் அதிபர் ராகுல் நம்பியார் மற்றும் பாடகர் வேல்முருகன் அத்துடன் புகழ்பெற்ற பாடகிகள் மாளவிகா மற்றும் பூஜா உட்பட பல பாடகர்கள் அத்துடன் **MAKKA** இசைக்குழுவின் வாத்தியக் கலைஞர்கள் என பலரும் வருகை தந்துள்ளனர். (தொடர்ச்சி 3ம் பக்கம்)



## "அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பு கனடாவில் மூன்று நாட்கள் நடத்திய தமிழ்மொழி ஆராய்ச்சி மாநாட்டின் இறுதியில் நடத்திய விருது விழாவில் மூன்று அர்ப்பணிப்பு மிக்க சாதனையாளர்களுக்கு அனைத்துலக சமூக விருதுகள் வழங்கப்பெற்றன







கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட" அனைத்துலக தமிழர் பேரவை அமைப்பு ஒக்டோபர் 15ம், 16ம், 17ம் ஆகிய மூன்று நாட்கள் நடத்திய வெற்றிகரமான தமிழ்மொழி ஆராய்ச்சி மாநாட்டினைத் தொடர்ந்து நான்காவது நாளான 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை டுறம் கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடத்திய அழகிய கலை மற்றும் விருது வழங்கும் விழாவில் மூன்று அர்ப்பணிப்பு மிக்க சாதனையாளர்களுக்கு அனைத்துலக சமூக விருதுகள் வழங்கப்பெற்றன. (தொடர்ச்சி 3ம் பக்கம்)

COMMERCIAL REAL ESTATE
BUY · SELL · LEASE
Sri Nada Rajasundram
Real Estate Broker
416-276-6666
RE/MAX ACE
Let's Talk Strategy.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிராம்டனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

G.Rajah
முள்ளிவாய்க்காலில் இருந்து...
NAM THAYAGAM
நம் தாயகம் INC
Nam Thayagam Inc.
3031, Markham Road, Unit #35, Scarbrough, ON M1X 1L9
namthyakam@gmail.com
416 558 2111

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers
- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 • Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca • email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# ஒரே நாளில் யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று அக்கறையோடு மக்களின் முறைப்பாடுகள்,பாடசாலைச் சமூகத்தின் தேவைகள் பற்றி கேட்டறிந்த வடக்கு மாகாண ஆளுநர்!

யாழ்ப்பாண மாகாணத்தை உள்ளடக்கிய வடக்கு மாகாணத்தில் முன்னர் பணியாற்றிய ஆளுனர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் தொடர்பாக அங்கு வாழுகின்ற மக்களுக்கும், கல்வியாளர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட பிரஜைகள் போன்றவர்களுக்கு போதிய திருப்தியில்லா ஒரு நீண்ட காலம் இருந்தது. அப்போது யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஏனைய அருகில் உள்ள மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்களின் தேவைகளை "கவனிக்க நேரம்" இல்லாவர்கள் போல செயற்பட்டார்கள். குறிப்பாக மன்னார் மாவட்டம், யாழ்ப்பாண மாவட்டம் போன்ற பகுதிக-ளின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் கொழும்பில் ஆட்சியில் உள்ள தலைவர்களோடு நெருக்கமான நட்பைக் கொண்டிருந்து அவர்களிடமிருந்து சலு-கைகளைப் பெற்றுக்கொண்டு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் கவ-னமாக இருந்தார்கள்.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவின் பதவி பறிபோகும் ஆபத்து பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற ஆயுதமாக சமர்ப்பிக்கப்பட்ட போது தலைவர் சம்பந்தன் மற்றும் அவரை இயக்கியவந்நத சுமந்திரன் போன்றவர்கள் தங்கள் சக பாராளுமன்ற உறுப்பினர்களை ரணிலின் ஆபத்து விலகிச் செல்லும் அளவிற்கு அந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வாக்களீத்தார்கள். அந்நேரம் உலகெங்கும் உள்ள தமிழர்கள் "மூக்கில் விரல்களை வைத்து" பார்த்துக்கொண்டிருந்த நேரம் சிங்கள மக்கள் மத்தியில் பல வினாக்கள் தோன்றின. துமிழர்களுக்கோ அன்றி சிங்கள மக்களுக்கோ அன்றி இஸ்லாமிய மக்களுக்கோ நன்மைகளிலும் பார்க்க அநியாயங்களைச் செய் ரணிலுக்கு வாக்களிக்க எவ்வாறு தமிழ் பேசும் எம்பிக்கள் வாக்களித்தார்கள்? அவர்களிடம் கேள்விகளைக் கேட்க மக்களுக்கு தைரியம் இல்லாமல் போய்விட்டதா? என்றெல்லாம் வினாக்களை முன்வைத்தார்கள்.

ஆனால் தனது பதவியை மீண்டும் தொடர்ந்த ரணில் தனது எஞ்சிய பதவிக்காலத்தில் பல தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மதுபான லைசன்ஸ் மற்றும் உணவுப் பொருட்கள் இறக்குமதி லைசன்ஸ் போன்றவற்றை வழங்கினார். இதனாலன் நமது எம்பிக்கள் சுகபோகங்களை அனுபவித்து அவற்றில் சிலர் தகாத செயல்களில் ஈடுபட்டு அந்த விவகாரங்கள் நீதி மன்றம் வரையில் சென்றமை எமது பழைய .அரசியல்வாதிகளின் "கதைகள்".

இவ்வாறானவர்கள் கொடிய யுத்தத்தில் கொல்லப்பட்ட போராளிகளுக்கோ அன்றி அவர்களின் குடும்பங்களுக்கோ உதவி செய்ய முன்வரவில்லை..

தங்களுக்கு மேலும் என்ன சலுகைகள் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு தங்கள் பதிவிக் காலத்தை "அனுபவித்தார்கள்."

2009ம் ஆண்டு தொடக்கம் கடந்த பொதுத் தேர்தல் வரையிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றிய உயர் அதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் தேவைகளை கவனிக்காமல் அவர்களின் துன்பங்களும் துயரங்களும் அடங்கிய காட்சிகளை "சினிமா" பார்ப்பது போல பார்த்துக் கொண்டிருந்தார்கள். அத்துடன் தங்களுக்குள் "சண்டையும்" பிடித்துக் கொண்டார்கள்.

ஆனால் தற்போது நீண்ட காலமாக அரசாங்க அதிபராகவும் பின்னர் புதிய அரசாங்கத்தால் வட மாகாண ஆளுனராகவும் நியமனம் செய்யப்பெற்ற வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் சேவையானது வடக்கு மாகாண மக்களாலும் கொழும்பில் உள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளினாலும் நன்கு கவனிக்கப்பெறுகின்ற ஒன்றாக விளங்குகின்றது.

இந்நேரத்தில் மற்றுமொரு தமிழ் பேசும் ஆளுனர் ஒருவர் பற்றியும் நாம் இங்கு குறிப்பிட வேண்டும். முன்னாள் ஜனாதிபதியும் சில நிதி மோசடிகள் தொடர்பாக விசாரிக்கப்பட்டவருமான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் காலத்தில் கிழக்கு மாகாணத்தின் ஆளுனராக நியமனம் செய்யப்பட்ட செந்தில் தொண்டமான் என்பவர் தனது பதவிக்காலத்தில் ஒரு வெளிப்படைத் தன்மை இலலாத நிர்வாகத்தை நடத்தி தானும் பல சுகபோகங்களை அனுபவித்த வண்ணம் பெரும் நிதி மோசடிகள் மற்றும் தனது சகாக்களுக்கு சட்ட விரோதமான முறையில் அரசாங்க காணிகளை வழங்கியமையும் தற்போதைய அநுர அரசாங்கத்தால் கண்டறியப்பட்டுள்ளன.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் எவ்வாறு யுத்தகாலத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பஞ்சலிங்கம் அவர்கள் ஒரு இரண்டாம் நிலை அதிகாரிபோல வீதிகளில் இறங்கி மக்களுக்காக சேவையாற்றினாரோ அதனிலும் அதிகமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஒருவராக ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் மக்களாலும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களாலும் நேசிக்கப்படுகின்றார்.

அவரது பணிகள் எப்போதும் மக்கள் சார்ந்து பாடசாலைக் கல்வி சார்ந்தும் தொழில் முனைவோரது முன்னேற்றம் கருதியும் இடம்பெறுவதும் அவரது பணி தொடர்பான விஜயங்கள் அர்ப்பணிப்போடும் கவனிப்போடும் மேற்கொள்ளப்படுகின்றன என்பது நன்கு வெளிப்படையாகவே தெரிகின்றன.

இந்த வாரத்தில் அவர் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் நேற்று 8ம் தி திகதி வியாழக்கிழமை களப் பயணத்தை மேற்கொண்டு, மக்கள், பாட-சாலை சமூகம் மற்றும் முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேரில் கேட்டறிந்த விடயம் தற்போது கொழும்பில் உள்ள உயர் அரச அதிக-ாரிகள் பாராட்டும் ஒரு விடயமாக உள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். அல்லைப்பிட்டி மற்றும் சுழிபுரம் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் முதலீட்டுச் செயற்பாடுகளை ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்டு வரும் அல்லை விலாஸ் முதலீட்டுத் திட்டத்தையும் ஆளுநர் பார்வையிட்டார். இத்திட்டத்தை முன்னெடுப்பதில் ஏற்பட்டிருந்த சில தாமதங்கள் முன்னதாக ஆளுநரின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்பட்டிருந்த நிலையில், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் அவற்றின் மூலம் குறித்த பிரதேசத்துக்கும் வடக்கு மாகாணத்துக்கும் கிடைக்கக்கூடிய பயன்கள் தொடர்பில் முதலீட்டாளர் சண்முகநாதன் சுகந்தனால் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆளுநர் கல்லுண்டாய் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குச் சென்றார். வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் விசேட பணிப்பின் பேரில் ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் ரூபா நிதியில், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் தாழ்நிலப் பகுதிகளுக்கு மண் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதை ஆளுநர் நேரில் பார்வையிட்டார்.

இதன்போது அங்கு வசிக்கும் மக்கள், தாங்கள் 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டிருந்தபோதிலும், அதன் பின்னர் நீண்டகாலமாக மண் நிரவுதல் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்தனர். தற்போது அவை முன்னெடுக்கப்படுவதற்கு நன்றியும் தெரிவித்த அவர்கள், வீடுகளில் காணப்படும் சில திருத்தப் பணிகளையும் மேற்கொடுக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர். மக்களின் கோரிக்கைகளை நேரில் கேட்டறிந்த ஆளுநர், நிலவரங்கள் தொடர்பில் உரிய முறையில் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி மற்றும் அரா-லி முருகமூர்த்தி வித்தியாலயம் ஆகியவற்றுக்குச் சென்ற ஆளுநர், அங்குள்ள கட்டடத் தேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாடசாலைகளின் ஏனைய தேவைகள் தொடர்பில் அதிபர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினரிடம் நேரில் கேட்டறிந்தார். இந்த விஜயமானது ஆளுனர் அவர்கள் கல்வி சார் நடவடிக்கைகள் சரியாக இடம்பெற வேண்டும் என்பதை உன்னிப்பாக கவனிக்கின்றார் என்பதை பறைசாற்றுகின்றது. தொடர்ந்து சில பாடசாலைகளின் அத்தியாவசிய தேவைகளை அடையாளம் கண்டு அவற்றை முன்னுரிமை அடிப்படையில் கையாள வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறு தற்போதைய வடக்கு மாகாண ஆளுனர் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மாத்திரமல்ல தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் எவ்வித தளர்வும் இன்றி விஜயங்களை மேற்கொண்டு அனைத்தையும் நேரடியாகக் கவனம் செலுத்துவதை பாதிக்கப்பட்ட எமது மக்கள் நன்றியுடன் நோக்குகின்றார்கள் என்பதும் நிஜமே!

முன்பக்கத் தொடர்ச்சி

## ஸ்காபுறோவில் "விஜயா யுவல்லறி" நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் இசை நிகழ்ச்சியும்

அனைவரையும் விமான நிலையத்தில் வரவேற்பதற்கு விஜயா யுவல்லறி நிறுவனத்தின் அதிபர் ரூபன் மற்றும் அவரது துணைவியார் அத்துடன் ஊடக நண்பர்கள் வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலர் சென்றிருந்தனர்.

அத்துடன் இன்று 22ம் திகதி வியாழக்கிழமை மாலை ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர்கள் சந்திப்பில் உள்ளுர் பாடக பாடகிகள் பலரும் கலந்து கொண்டு ரசிகர்களை மகிழ்வித்தனர்.

இங்கே காணப்படும் படங்கள் விமான நிலையத்திலும்ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்திலும் எடுக்கப்பெற்றவையாகும்

முன்பக்கத் தொடர்ச்சி

## அனைத்துலக தமிழர் பேரவை அமைப்பு கனடாவில் மூன்று நாட்கள் நடத்திய தமிழ்மொழி ஆராய்ச்சி மாநாட்டின் இறுதியில்

அவர்களில் தற்போது இலங்கைப் பாராளுமன்றத்தின் திருகோணமலை தொகுதியின் உறுப்பினராக சேவையாற்றும் சண்முகம் குகதாசனுக்கு அவர்களுக்கு சமூக சேவைக்கான சாதனை விருதும் வாழ்நாள் பேராசிரியரும் அறிஞருமான அருணாசலம் சண்முகதாஸ் அவர்களுக்கு தமிழ்மொழி ஆராய்ச்சி மற்றும் கற்பித்தல் திறனுக்கான உயர் சாதனை விருதும் நோர்வே தேசத்தில் வாழ்ந்த வண்ணம் ஆடற்கலை மற்றும் கலை இலக்கியம் பண்பாடு ஆகிய துறைகளில் நீண்ட காலம் சேவையாற்றும் கவிதா லக்ஸ்மி அவர்களுக்கு அத்துறைகள் சார்ந்த சாதனை விருதும் வழங்கப்பெற்றன.

மேற்படி விருதுகள் மேடையில் வழங்கப்பெற்ற போது அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் மற்றும் ஏனைய அறிஞர் பெருமக்கள் அத்துடன் பேரவை வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்து வரும் அதன் முக்கிய உறுப்பினர்கள் என அனைவரும் மகிழ்ச்சியோடு நிற்பதைக் காணலாம்.



Photo: Alamy Stock Photo

# ஒலிவியா செளவை மீண்டும் ரொறன்ரோ மாநகர மேயராகத் தேர்ந்தெடுப்போம்!

## ஒக்டோபர் 26, திங்கட்கிழமை அவருக்கு உங்கள் வாக்கைப் பதிவு செய்யுங்கள்!

2009-ஆம் ஆண்டு தமிழ் சமூகம் நீதிக்காகக் குரல் கொடுத்தபோது, ஒலிவியா செளவும் ஜக் லேட்டனும் எம்மோடு உறுதியாகத் துணை நின்றார்கள். அன்று முதல் இன்று வரை, எமது சமூகத்தின் குரலாகவும் நல்வாழ்வுக்கான பலமாகவும் அவர் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றார். எமது சமூகத்திற்கான அவரது முக்கிய திட்டங்கள்:

- **நிரந்தரத் தமிழ்ச் சமூக மையம் அமைத்தல்.**
- **2028-ஆம் ஆண்டுக்குள் ஸ்காபரோவில் தமிழின அழிப்பு நினைவகம் நிறுவுதல்.**

### இளையோரின் முன்னேற்றத்திற்காக

- அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் இலவச மதிய உணவு.
- புதிய விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்கள்.
- இளையோருக்கான புதிய வேலைவாய்ப்புகள்.
- வாரத்தின் 7 நாட்களும் இயங்கும் நூலகங்கள்.

### முதியோரின் நல்வாழ்விற்காக

- முதியோர்கள் தங்கள் வீடுகளிலேயே சுதந்திரமாக வாழ்வதற்கான உதவிகள்.
- இலவச வீட்டுப் பராமரிப்பு மற்றும் நடமாடும் மருத்துவச் சேவைகள்.
- 28,000 முதியோர்கள் பயனடையும் சிறப்புச் சமூகத் திட்டங்கள்.

### வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக

- தொடர்ந்து 4-வது ஆண்டாக ரொறன்ரோ பொதுப்போக்குவரத்துச் சேவை (TTC) கட்டண உயர்வு இல்லை!
- வாரத்திற்கு 10 முறை ரி.ரி.சி.யில் (TTC) பயணித்தால், அந்த வாரத்தின் எஞ்சிய அனைத்துப் பயணங்களும் முற்றிலும் இலவசம்!

**MONDAY, OCT 26 RE-ELECT OLIVIA CHOW MAYOR**

OLIVIACHOW.CA

#9 ON BALLOT

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சுன்னாகத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் கைது!

பு. கஜிந்தன்

19ம் திகதி திங்கட்கிழமை இரவு சுன்னாகம் தெற்கு, கல்லாக்காட்டுவான் பகுதியில் 1.800 கிராம் ஹெரோயினுடன் 29 வயதுடைய குடும்பப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண், சான்றுப் பொருட்களுடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். இது குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பப்பெண் மரணம்!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாகன விபத்து சம்பவத்தில் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். இதன்போது நீர்வேலி தெற்கு, நீர்வேலி பகுதியைச் சேர்ந்வயது 66 உடைய த. ஞானேந்திரன் விமலா என்னும் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், இவர் 19ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் ஊர்காவற்துறை பகுதியில் மரணச் சடங்கு ஒன்றிற்கு சென்றுள்ளார். பின்னர் யாழ்ப்பாணம் நோக்கி முச்சக்கர வண்டியில் வந்துள்ளார்.

அவர்கள் பயணித்த முச்சக்கர வண்டிக்கு முன்பாக பயணித்த அரச பேருந்தானது அல்லைப்பிட்டி பகுதியில் நிறுத்தப்பட்டபோது முச்சக்கர வண்டியானது வேகக் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து மீது மோதி விபத்து சம்பவித்தது.

இதன்போது முச்சக்கர வண்டி சாரதி, குறித்த பெண் மற்றும் அவருடன் பயணித்த மற்றொரு பெண் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இது குறித்து ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புளொட்டின் 46வது ஆண்டு விழா சாவகச்சேரியில் இடம்பெற்றது!





தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 46வது ஆண்டு விழா 19ம் திகதி அன்று திங்கட்கிழமை மாலை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உபநகரபிதா ஞா.கிஷோர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பா.கஜதீபன், கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், கழகத்தின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் சர்வதேச கிளை உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கட்சியின் நிதியில் இருந்து சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதார தொழிலாளர்களுக்கு மழை அங்கிகளும், பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும், கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.



# வடக்கு நிலத்தடி நீர் முகாமைத்துவப் பிரிவுக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டல்!

வடக்கு மாகாண நிலத்தடி நீர் முகாமைத்துவப் பிரிவுக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் நடுகை செய்யப்பட்டது.190 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளது.

ஒருவரின் கட்டுப்பாடற்ற நீர்ப்பயன்பாடு மற்றொருவரின் குடிநீர் வளத்தைப் பாதிக்காத வகையில், அனைவருக்கும் பாதுகாப்பான நீர் கிடைப்பதை உறுதிப்படுத்துவதே எமது நோக்கம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண நிலத்தடி நீர் முகாமைத்துவப் பிரிவை 190 மில்லியன் ரூபா செலவில் நிறுவுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு 16ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் நடைபெற்றது. இலங்கை நீர்வளச் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரையாற்றியபோதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிநீர், விவசாயம் மற்றும் மக்களின் அன்றாட வாழ்வாதாரம் ஆகியவற்றுக்கு நிலத்தடி நீரே முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது.

கட்டுப்பாடற்ற இரசாயன உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்களின் பயன்பாடு, முறையற்ற கழிவகற்றல், அளவுக்கு அதிகமான நீர் உறிஞ்சுதல் போன்ற காரணிகள் நிலத்தடி நீரின் தரத்தையும் கிடைப்பையும் பாதிக்கின்றன. எனவே, நீர் கிடைப்பதை உறுதிப்படுத்துவதுடன், அது குடிப்பதற்கும் விவசாயத்துக்கும் பாதுகாப்பானதாக இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் என ஆளுநர் வலியுறுத்தினார்.

புதிதாக அமைக்கப்படும் நிலத்தடி நீர் முகாமைத்துவப் பிரிவு, நீரின் அளவு மற்றும் தரத்தைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல், மாசுபாட்டுக்கான ஆபத்துகளைக் கண்டறிதல், நிலத்தடி நீர் வளங்களை வரைபடமாக்குதல், குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கான தொழில்நுட்ப மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிலத்தடி நீரை மீள்நிரப்பும் திட்டங்களுக்கு வழிகாட்டுதல் உள்ளிட்ட பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், 2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான அனுமதி மற்றும் அவற்றை அமைப்பதில் ஈடுபடுவோரின் பதிவுகள் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளபோதும், வடக்கு மாகாணத்தின் தனித்துவமான நிலத்தடி நீர் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அவற்றை மேலும் வலுப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

எனவே, குழாய்க் கிணறுகளை அமைத்தல், அவற்றின் பயன்பாடு, நீர் எடுக்கும் அளவு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய திருத்தங்களுடன் கூடிய புதிய வர்த்தமானி அறிவித்தலை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு சுற்றுச்சூழல் அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

மழைநீரைச் சேமித்தல், இயற்கையான நீர்வழிகளைப் பாதுகாத்தல், நிலத்தடி நீரை மீள்நிரப்புதல் போன்ற நடவடிக்கைகளை அறிவியல் அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், நீர்வளப் பாதுகாப்பு தொடர்பான முடிவுகள் உணர்ச்சிகளின் அடிப்படையில் அல்லாமல், ஆய்வுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நிலத்தடி நீரைப் பாதுகாப்பது அரச நிறுவனங்களின் பொறுப்பு மட்டுமல்ல, விவசாயிகள், உள்ளூராட்சி அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய கடமையாகும்.

இன்று ஆரம்பிக்கப்படும் இந்த முயற்சி நீண்டகாலப் பயனைத் தரும் வகையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், எதிர்காலத் தலைமுறையினருக்குப் பாதுகாப்பான நீர்வளத்தை ஒப்படைப்பதில் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.



இந்நிகழ்வில் சுற்றுச்சூழல் அமைச்சர் கௌரவ கலாநிதி தம்மிக்க படபெந்தி, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், கௌரவ பிரதியமைச்சர், யாழ்ப்பாண மாவட்டச் செயலர், நீர்வளச் சபையின் அதிகாரிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினரின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாணம் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மோசமான நிலைமை தொடர்பில் ஆளுநர் தலைமையில் நடைபெற்ற ஆராய்வுக் கூட்டம்!



யாழ்ப்பாண நகரின் இதயமாக விளங்கும் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மோசமான நிலைமை தொடர்பில் நேரில் பார்வையிட்டு, உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உறுதியளித்தார்.

ஆளுநருக்கும் யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் 20ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் பராமரிப்பின்மை, மலசலகூடங்களின் மோசமான நிலைமை, இரவு வேளைகளில் இடம்பெறும் சமூகவிரோதச் செயற்பாடுகள் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் வணிகர் கழகப் பிரதிநிதிகள் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். இவ்விடயங்கள் தொடர்பில் பலமுறை முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினர்.

மேலும், கடைகளின் உரிம மாற்ற நடவடிக்கைகளில் காணப்படும் தாமதத்தைச் சுட்டிக்காட்டிய அவர்கள், அதனை விரைவுபடுத்த வேண்டும் என்றும் கோரினர். எதிர்காலத்தில் வாடகை மீள்நிர்ணயம் செய்யப்படும்போது உரிம மாற்றச் செயன்முறையிலும் தாக்கம் ஏற்படக்கூடும் என்பதையும் எடுத்துரைத்தனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையப் பகுதியில் அதிகரித்துள்ள நெரிசல் மற்றும் தனியார் பேருந்துச் சேவைகளால் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவது தொடர்பிலும் வணிகர் கழகப் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

வணிகர் கழகத்தினரின் கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட ஆளுநர், விரைவில் நவீன சந்தைக் கட்டடத் தொகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு, பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் மற்றும் பிரத்தியேகச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மன்னார்புதுக்கமம் கிராம மக்கள் தமது கிராமத்திற்கு குடிநீர் இணைப்பு வழங்க கோரி அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்



(19-10-2026)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புதுக்கமம் கிராம மக்கள் தமது கிராமத்திற்கு குடிநீர் இணைப்பு மற்றும் நீர் விநியோகத்தை வழங்க கோரி 19ம் திகதி அன்றைய தினம் திங்கட்கிழமை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

மன்னார் உயிலங்குளம் புதுக்கமம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் அன்றைய தினம் திங்கட்கிழமை (19) காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் யை சந்தித்து தமது கிராமத்தின் அவல நிலையை அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றதோடு, தமது கிராமத்திற்கு உடனடியாக குடி நீரை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

மேலும் குறிப்பாக புதுக்கமம் கிராமத்தில் சுமார் 130 குடும்பங்கள் வரை வசித்து வருகின்ற நிலையில்,நாளாந்தம் குடி நீரை பெற்றுக் கொள்வதில் குறிப்பாக சுத்தமான குடி நீரை பெற்றுக் கொள்வதில் இக்கிராம மக்கள் தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பாரிய பிரச்சினைகளுக்கும் அக்கிராம மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

குடிநீர் பிரச்சினை தொடர்பாக இரு தடவைகள் மன்னார் பிரதேச செயலகத்திற்கு கடிதங்களை கை அளித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என கவலை தெரிவித்துள்ளனர்.

குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான பிரதான குழாய் நீர் உள்ள இடத்தில் இருந்து சுமார் 1 கிலோமீட்டர் தொலைவில் தமது கிராமம் உள்ளதாகவும், உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி தமது கிராமத்திற்கு குடிநீர் இணைப்பு மற்றும் குடி நீரை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என புதுக்கமம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் உள்ள குடிநீர் பிரச்சினை தொடர்பாக அக்கிராம மக்கள் புதுக்கமம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பிரதி நிதிகள் ஊடாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மன்னார் பிரதேச சபை உறுப்பினர் லூக்கஸ் சோபனா அலெக்சாண்டர் அவர்களிடம் கோரிக்கை முன் வைத்த நிலையில் பிரதேச சபை உறுப்பினர் ஊடாக அன்றைய தினம் திங்கட்கிழமை (19-10-2026) புதுக்கமம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து தமது கிராம பிரச்சினைகள் மற்றும் குடிநீர் பிரச்சினையை முன்வைத்து மகஜர் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐந்து நாடுகள் பங்குபற்றிய மாபெரும் சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டியில் மன்னார் மாவட்ட வீரர் விராங்கனைகள் சாதனை






(19-10-2026)

வென்னப்புவ உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை (17) காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை இலங்கை உட்பட ஐந்து நாடுகள் பங்குபற்றிய மாபெரும் சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் மன்னார் ASKO கராத்தே கழகத்தின் பிரதான ஆசிரியர் மத்தியாஸ் அன்ரனி இன்பராஜ் அவர்களது பயிற்சியில் அவரது மாணவர்கள் சுமார் 50 பேர் பங்குபற்றி 114 பதக்கங்களை பெற்றுள்ளனர்.

இந்த போட்டியில் ASKO கராத்தே கழகம் இரண்டாம் இடத்தை பெற்றதுடன் அதற்குரிய பரிசு நினைவு கிண்ணமும் வழங்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற சர்வதேச போட்டிக்கு மன்னார் மாவட்டம் சார்பாக ASKO கராத்தே கழகம் பங்கு வகித்ததுடன் பதக்கங்களை பெற்று இரண்டாம் இடத்தை பெற்றதில் உப்புகுளம், பள்ளிமுனை, மன்னார் நகரம், பட்டித்தோட்டம், கீரி, அடம்பன், பனங்கட்டு கொட்டு, மற்றும் ஜோசப்வாஸ் நகர் ஆகிய கிராமங்களை சேர்ந்த கராத்தே மாணவர்கள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னர் மாவட்ட கராத்தே வரலாற்றில் முதல் முறையாக சர்வதேச போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டமை இதுவே முதல் தடவையாகும்.



# முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் பல மணி நேரம் பலத்த தேடதல் நடத்திய புலனாய்வுப் பொலிசார்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



யாழ்ப்பாணம், 273, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலத்திலும் அதன் வளாகத்திலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் பல மணி நேரம் தீவிர தேடுதல் நடவடிக்கையில் 19ம் திகதி திங்கட்கிழமை அன்று ஈடுபட்டனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கிடைத்ததாகக் கூறப்படும் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாண நீதிமன்றத்தில் தேடுதல் ஆணையைப் பெற்று இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வு துறையினர் தெரிவித்தனர்.

இதன்போது, 273, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் மற்றும் வளாகம் முழுவதும் அதிகாரிகளால் விரிவாகச் சல்லடைபோட்டு தேடப்பட்டது.

பரபரப்பை ஏற்படுத்திய பல மணி நேரம் நீடித்த இந்தத் தேடுதலின் நிறைவில், செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில், கட்சியின் அலுவலக நிர்வாக பொறுப்பாளரிடம் குற்றப் புலனாய்வு பிரிவினர் வாக்குமூலம் பெற்றுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை நடனப் போட்டியில் வேலணை மத்திய கல்லூரி மாணவர்கள் மாகாண மட்டத்தில் சாதனை!



அகில இலங்கை நடனப் போட்டியில் மாகாண மட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதன்படி, போட்டியின் பல்வேறு பிரிவுகளில் பங்குபற்றிய கல்லூரி மாணவர்கள் நான்கு இடங்களைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

அந்தவகையில் தனி நடனம் - முதலாம் இடம்
குழு நடனம் - இரண்டாம் இடம்
வயலின் இசை - இரண்டாம் இடம்
தனி இசை - இரண்டாம் இடம் என பெற்றுள்ளனர்.

மாகாண மட்டத்தில் கலைத்துறையில் மாணவர்கள் வெளிப்படுத்தியுள்ள இந்தச் சிறப்பான திறமை, கல்லூரியின் கலைசார் வளர்ச்சியையும் மாணவர்களின் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

# வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளுக்கான பாதுகாப்பை நீக்குவது ஆபத்தானது!

**- சர்வஜன அதிகாரம் கட்சி எச்சரிக்கை**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பௌத்த விகாரைகள் மற்றும் பிக்குகள் மடங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பை நீக்குவது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று சர்வஜன அதிகாரம் கட்சியின் ஊடகப் பேச்சாளர் பிரியங்கார மகாமுல்லகே எச்சரித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் குறிப்பிட்டதாவது: "வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல ஆண்டுகளுக்கும் மேலாகக் காட்டுப் பகுதிகளிலுள்ள பிக்குகள் மடங்களில் தங்கியிருந்து பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காகப் பிக்குகள் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளனர். இவ்வாறான நிலையில், அப்பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படுவதுடன், பிக்குகளுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பும் நீக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த காலத்தில் இடம்பெற்ற மோதல்களால் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டனர். காத்தான்குடி, கோனகல உள்ளிட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களும், வடக்கு, கிழக்கில் வாழ்ந்த சிங்கள மக்களும் எதிர்கொண்ட துயரங்களை மறந்துவிட முடியாது. சுமார் 30 ஆண்டுகால போருக்குப் பின்னரே நாட்டில் அமைதி திரும்பியது.

போர் முடிவடைந்த பின்னர் பிக்குகள் மீண்டும் வடக்கு, கிழக்குக்குச் சென்று தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் காட்டுப் பகுதிகளுக்கும் அருகில் பிக்குகள் மடங்களை அமைத்து மதப்பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். உதாரணமாக, திருகோணமலை மாவட்டத்தின் அரிசிமலைப் பகுதியில் 38 பிக்குகள் மடங்கள் உருவாக்கப்பட்டு 210 பிக்குகள் உபசம்பதா பெற்றுள்ளனர். இவ்வாறான கடினமான சூழ்நிலைகளில் மதப் பணிகளில் ஈடுபடும் பிக்குகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்." - என்றார்.

பிக்குகளுக்கு நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்துச் சுட்டிக்காட்டிய அவர், "பனாமுரே திலகவன்ச தேரர், பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவுக்கு எழுதிய கடிதத்தில், தனது உயிரைப் பாதுகாப்பதற்காக மீண்டும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு கோரியுள்ளார். கடந்த மாதம் வாள்களுடன் வந்த சிலர் தன்னைத் தேடியதாகவும், முறைப்பாட்டையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிக்குகள் அங்கிருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டால், அப்பகுதிகளில் வாழும் சிங்கள மக்களும் வெளியேறக்கூடிய சூழ்நிலை உருவாகலாம். 1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தின் போது ஏற்பட்ட பதற்றங்களையும் அதன் மோசமான விளைவுகளையும் நாம் மறந்துவிடக்கூடாது. மீண்டும் அவ்வாறான இன முரண்பாடுகள் தோற்றம் பெறாத வகையில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

எனவே, வடக்கு, கிழக்கிலுள்ள பௌத்த விகாரைகள், பிக்குகள் மடங்கள் மற்றும் அங்குள்ள பிக்குகளின் பாதுகாப்பை முழுமையாக உறுதிப்படுத்துவது அரச-ின் தலையாய பொறுப்பாகும்." - என்றார்.

# சுற்றுலாத்துறையின் வளர்ச்சியின் மூலம் வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்

## ஆளுநர் வேதநாயகன்



"சுற்றுலாவிகளின் வருகை அதிகரிப்பதுடன், வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரமும் வருமானமும் உயர வேண்டும். இதுவே சுற்றுலாத்துறை வளர்ச்சியின் உண்மையான பயனாக அமைய வேண்டும்." - என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், "இந்திய - இலங்கை சுற்றுலா இணைப்பு" என்ற தொனிப்பொருளிலான சுற்றுலாத்துறை வர்த்தகச் சந்திப்பு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் "ஸ்கை டூரிசம்" நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில், இந்தியாவிலிருந்து வருகை தந்த சுற்றுலாத்துறைப் பிரதிநிதிகள், சுற்றுலா இயக்குநர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் உள்ளூர் சுற்றுலாத்துறைத் தொழில் முயற்சியாளர்கள் பங்கேற்றனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் மொழி, மதம், பண்பாடு, குடும்ப உறவுகள் மற்றும் வரலாறு சார்ந்த தொடர்புகள் பல நூற்றாண்டுகளாக நிலவுவதாகக் குறிப்பிட்ட ஆளுநர், இந்தத் தொன்மையான உறவுகளைச் சுற்றுலாத்துறையின் ஊடாகப் புதிய பொருளாதார வாய்ப்புகளாக மாற்றுவதற்கான காலம் இது என்றும் தெரிவித்தார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயம், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம், செல்வச்சந்நிதி உள்ளிட்ட ஆன்மிகத் தலங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், தீவுகளுக்கான பயணங்கள் மற்றும் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய உணவு வகைகளை ஒருங்கிணைத்து, இந்தியச் சுற்றுலாவிகளைக் கவரக்கூடிய சிறப்பான சுற்றுலாப் பொதிகளை உருவாக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான விமானப் போக்குவரத்தையும், நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கடல் போக்குவரத்தையும் முழுமையாகப் பயன்படுத்தி, இந்தியச் சுற்றுலாவிகள் வடக்கு மாகாணத்தில் பல நாள்கள் தங்கிச் சுற்றிப்பார்க்கக்கூடிய பயணத் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இந்தியாவில் எந்த வகையான சுற்றுலாப் பொதிகளுக்கு வரவேற்பு உள்ளது, சுற்றுலாவிகள் எத்தனை நாள்கள் தங்க விரும்புகின்றனர், போக்குவரத்து, தங்குமிடம், உணவு மற்றும் வழிகாட்டல் சேவைகளை எவ்வாறு சிறப்பாக ஒருங்கிணைக்கலாம் என்பன தொடர்பில் இந்தியப் பிரதிநிதிகளின் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

கலந்துரையாடல்களுடன் மட்டும் நின்றுவிடாமல், நடைமுறைக்கு ஏற்ற சுற்றுலாப் பொதிகளை உருவாக்குதல், அவற்றைச் சந்தைப்படுத்துதல் மற்றும் இந்தியச் சுற்றுலா முகமைகளுக்கும் வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறைத் தொழில் முயற்சியாளர்களுக்கும் இடையில் நேரடி வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் சார்பில் துணைத் தூதுவரும் அபிவிருத்தி ஒத்துழைப்பு, வர்த்தகம், கலாசாரம் மற்றும் தகவல் பிரிவுகளுக்குப் பொறுப்பானவரும் தூதரக அலுவலகத் தலைவருமான ஸ்ரீ சங்கரன் ராஜகோபாலன், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் கலாநிதி ஜே.விவேகானந்தன், தென்தமிழக சுற்றுலா மற்றும் போக்குவரத்துக் கழகத்தின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள், இந்தியச் சுற்றுலாத்துறைப் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் சுற்றுலாத்துறைத் தொழில் முயற்சியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# கம்பஹா, கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திரையரங்கிலிருந்து துப்பாக்கிகள், வெடிமருந்துகள் கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன

கம்பஹா, கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹன்வெல்ல வீதியில் உள்ள ஒரு திரையரங்கில் பொலிஸார் 19ம் திகதி திங்கட்கிழமை அன்று திடீர் சோதனைகளை முன்னெடுத்துள்ளனர். இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள், வெடிமருந்துகள் மற்றும் கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மில்லத்த பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட பொருள்களில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு கைத்துப்பாக்கிகள், ஒரு ரிவோல்வர், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிப்பீட்டர் ரக துப்பாக்கி, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 12 - போர் ரக துப்பாக்கி, 398 எண்ணிக்கையிலான 12 - போர் ரக தோட்டாக்கள், 278 எண்ணிக்கையிலான 16 - போர் ரக தோட்டாக்கள், ரி - 32 ரக துப்பாக்கிக்கான 49 தோட்டாக்கள், அதே ரகத்தைச் சேர்ந்த மேலும் 3 ஆயிரத்து 83 தோட்டாக்கள் மற்றும் இரண்டு கைக்குண்டுகள் அடங்குகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.



இந்தச் சம்பவம் குறித்து கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

# காலிமுகத் திடலில் கரிசனை காட்டும் அரசாங்கம் காணிகளை கேட்கும் தமிழ் மக்களை கண்டுகொள்வதைத் தவிர்ப்பது ஏன்? - ஈ.பி.டி.பி. ஸ்ரீகாந் ஆதங்கம்!



ஞானசார தேரருக்கு ஆதரவான காலிமுகத் திடல் போராட்டத்தினை கரிசனையோடு கையாளுகின்ற அரசாங்கம், தமிழ் மக்களின் நிதியான போராட்டங்களை கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனையளிக்கின்றது என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி 26 ஆவது வாரமாக 16ம் திகதி வெள்ளிக்கிழமை அன்று முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி அநுர வெளியிட்ட கருத்துக்கள் மீதும், அவர் காண்பித்த உணர்வுகள் மீதும் நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்கள் ஏமாற்றத்தோடு வீதிகளில் காத்திருக்கின்றனர்.

இங்கே நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராடுகின்றவர்களை யாரும் கண்டு கொள்வதாக தெரியவில்லை.

பல தசாப்தங்களாக உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் காணிகளை பறிகொடுத்துவிட்டு தவித்து வருகின்ற மக்கள், தேசிய மக்கள் சக்தியினர் வழங்கிய உறுதிமொழிகளை நம்பி வாக்களித்திருந்தனர்.

குறிப்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் உணர்வுபூர்வமான கருத்துகள் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்திருந்தனர்.

கடந்த இரண்டு வருடங்களாகியும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக அவர்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

இதனால் ஏமாற்றமடைந்த மக்கள் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். தொடர் போராட்டங்களில் கொட்டு மழையிலும் வெய்யிலிலும் தொடர்ந்தும் போராடுகின்ற இந்த மக்களை இந்த அரசாங்கம் கண்டுகொள்வதாக தெரியவில்லை.

ஜனாதிபதி அநுரவை நம்பி வாக்களித்த இந்த மக்களை ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக எமது பிரதேசத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற ஆளுநர், அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற யாருமே கண்டு கொள்வதாக தெரியவில்லை.

ஆனால், நிதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஞானசார தேரரை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைளை முன்வைத்து கண்டியில் இருந்து பாத யாத்திரை மேற்கொண்டவர்கள், ஜனாதிபதி செயலகத்தின் முன்றலை வந்தடைந்து சில மணித்தியாலங்களுக்குள் ஜனாதிபதியின் செயலாளர் வந்து போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடுகின்றார்.

போராடுகின்றவர்களின் கோரிக்கை சாதகமாக பரீசிலீக்கப்படும் என்று ஆசுவாசப்படுத்துகின்றனர்.

அரசாங்கத்தின் இவ்வாறான இரண்டு விதமான நடைமுறைகளினால் அதிப்தி அடைந்துள்ள, காணிகளுக்காக போராடுகின்ற தமிழ் மக்கள் இந்த அரசாங்கமும் தங்களை மாற்றாந் தாய் மனப்பான்மையோடு நடாத்துவதாக ஆதங்கப்படுகின்றனர்.

காணிகளுக்காக போரர்டுகின்ற வலி வடக்கு மக்களின் எதிர்பார்ப்பு என்பது அசாத்தியமான ஒன்றல்ல, கட்டம்கட்டமாக வேணும் தங்களின் காணிகளை விடுவிக்குமாறே வலியுறுத்துகின்றனர்.

ஆனால், கடந்த அரசாங்கத்தின் இறுதிக் காலங்களில் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட காணிகளைக்கூட விடுப்பதற்கான உத்தரவுகாளை வழங்காமல் இந்த அரசாங்கம் காலத்தினை கடத்துகின்ற நிலைதான் காணப்படுகின்றது.

எனவே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா அவரக்ள் இந்த மக்களின் நியாயமான கோரிக்கைகளை கவனத்தில் எடுத்து கட்டம் கட்டமாகவேனும் அவர்களின் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.



# வலி. கிழக்கு பிரதேச சபையில் பக்திபூர்வமாக இடம்பெற்ற விஜயதசமி பூசையும் ஏடுதொடக்கமும்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நவராத்திரி விஜயதசமி பூசையும் பிரதேச சபைக்குச் சொந்தமான கோப்பாய் சிகரம் முன்பள்ளியின் நவராத்திரி விழாவும் ஏடுதொடக்குதல் நிகழ்வும் 20ம் திகதி அன்று செவ்வாய்கிழமை காலை சிறப்புற நடைபெற்றன.

காலை முன்பள்ளியின் விஜயதசமி பூசை வழிபாடுகள் மாணவர்கள்இ பெற்றோர்இ ஆசிரியர்கள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், செயலாளர், தவிசாளர் ஆகியோரின் பங்கேற்புடன் பக்தியுடன் இருபாலையில் நடைபெற்றன.



இதனைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் புதிதாக கல்வியை ஆரம்பிக்கின்ற சிறார்களுக்கான ஏடுதொடக்குதல் நிகழ்வு இடம்பெற்றது. புதிதாக கல்வியை ஆரம்பிக்கின்ற மாணவர்களுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷினால் சிறார்களுக்கு ஏடுதொடக்கிவைக்கப்பட்டது.



இந் நிகழ்வில் பங்கேற்ற மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பங்கேற்ற மாணவர்களுக்கு பரில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து மதியம் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் விஜயதசமி பூசை வழிபாடுகள் சிறப்புற நடைபெற்றன. இந் நிகழ்வுகளிலும் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், செயலாளர் இராமலிங்கம் பகிரதன், உப தவிசாளர் தர்மலிங்கம் ஜனார்த்தனன், சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# "தியாகி திலீபன் ஒரு "புலி" என்று தெரிந்துகொண்டும் சிலை வைக்க எவ்வாறு அனுமதி வழங்கினீர்கள்?"



## யாழ்ப்பாணம் மாநகர முதல்வரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய 2 மணி நேர விசாரணையின் போது கேள்வி

- ந.லோகதயாளன்

தியாகி திலீபன் புலி என்றும் தெரிந்துகொண்டா சிலை வைக்க அனுமதி வழங்கினிர்கள் என யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் திருமதி. வி.மதிவதனியிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையின் போது வினாக்களைத் தொடுத்தனர்.

20ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றைய தினம் மாநகர சபை அலுவலகத்தில் இரண்டு மணி நேரம் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது. இதன்போதே குறித்த விடயமும் வினாவப்பட்டுள்ளது.

இதன்போது தியாகி திலீபனின் சிலை வைக்க அனுமதி, சிலை செய்தமை மற்றும் செய்த இடங்களுடன் சபை அனுமதி வழங்கியபோது சபையில் பிரசன்டமாகி இருந்த உறுப்பினர்கள் தொடர்பான விபரங்களும் அவரிடன் கேட்டடறியப்பட்டுள்ளன.

இதேபோன்று மேலும. பல வினாக்கள் தொடுக்கப்பட்டு அனைத்தும் வாக்கு மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் தரப்பில் 4 பொலிஸார் இந்த விசாரணையில் பங்குகொண்டிருந்ததாக தெரியவருகின்றது.

# புதிய சட்டமூலங்கள் தமிழ் மக்களுக்கு உணர்த்துவது?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**அந்தப் "பழைய" பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் வேட்டை பற்களுக்குள் சிக்கித் தப்பிப் பிழைத்த ஜேவிபிதான் இப்பொழுது அரசாங்கத்தின் அடித்தளமாக இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் போராடியபோது ஜேவிபியும் அவர்களோடு காணப்பட்டது. அதே ஜேபிபியை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இப்பொழுது நாட்டை ஆள்வதற்கு ஒரு புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றது.**

பயங்கரவாதத்திலிருந்து அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கான சட்டமூலத்திற்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை வரையிலும் 40 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சுப்ரீம் கோர்ட் வட்டாரங்கள் தெரிவித்ததாக, ஒரு சிங்கள மனித உரிமைச் செயற்பாட்டாளர் முகநூலில் பதிவிட்டிருந்தார்.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முக்கிய சட்டச் செயற்பாட்டாளர்கள் மேற்படி சட்டமூலத்திற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். "முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கும் மக்களின் சுதந்திரத்திற்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு கால-ாவதியான சட்டக் கட்டமைப்பு" என்று கூறுகி-றார் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவஸிறி "1979 ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளிட்ட இந்நாட்டின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் வரலாற்றைப் பார்க்கும்போது, அவை பயங்கரவாதத்தை அடக்கியதை விட மக்களின் அரசியல் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் போராட்டங்களை நடத்தும் ஜனநாயக வழிகளை அடக்குவதற்கே தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது புல-னாகிறது. மறுபுறம், 1980களில் வடக்கிலும் தெற்கிலும் ஆயுதமேந்திய எழுச்சிகள் மேலும் தீவிரமடைவதற்கே இத்தகைய கடுமையான சட்டங்கள் காரணமாயினவே தவிர, அவற்றினால் வன்முறைகள் கட்டுப்படுத்தப்படவில்லை." என்றும் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவஸிறி கூறுகிறார்.

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் மட்டுமல்ல, சிவில் சமூகச் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்காக முன்மொழிக்கப்பட்ட மற்றோரு புதிய சட்டமூலம் தொடர்பாகவும் சிவில் சமூகங்கள் பின்வரும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன.. "புதியதாக முன்மொழியப்பட்டுள்ள சட்டம், சிறிய சமூகக் குழுக்களைக்கூட அரசாங்கத்தின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரக்கூடும். மரண உதவிச் சங்கங்கள் முதல் சீட்டுச் சங்கங்கள் மற்றும் லயன்ஸ் கழகங்கள்வரை, தங்கள் சமூகங்களுக்கு உதவுவதற்காக ஒன்றிணைந்து செயற்படும் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் பதிவுசெய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்படலாம். இது நிதிக் குற்றங்களைத் தடுப்பதைப் பற்றியது மட்டுமல்ல.மாறாக, சிவில் சமூகச் செயற்பாடுகள் மீதான கட்டுப்பாட்டை விரிவுபடுத்துவதைப் பற்றியது".

அதுபோலவே, மற்றொரு சட்டமூலம், "ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்கான சட்டமூலம்", ஒக்டோபர் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முதன்முறையாக வாசிக்கப்பட்டது. இது இன்னும் சட்டமாக மாறவில்லை. "ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவொன்றுடன் ஒருவர் தொடர்புடையவரா என்பதைத் தீர்மானிக்கும்போது, அந்த நபரின் தலை-லமுடி அலங்காரம், பச்சை குத்தல்கள் அல்லது ஆடைகளை நீதிமன்றங்கள் கருத்தில்கொள்ள அனுமதிக்கும் ஏற்பாடும் இந்தச் சட்டமூலத்தில் இருப்பதாக" சட்டத்தரணி சாலிய பீரிஸ்- இவர், இலங்கை சட்டத்தரணிகள் அமைப்பின் முன்னாள் தலைவராக இருந்தவர் -தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிபிஎஸ் பிளஸ் சலு-கைகளைத் தொடர்ந்து பெறுவதற்காக அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யும் அதேசமயம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இருந்து நீக்கப்பட்ட விடயங்களை உத்தேச "ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்கான" சட்டமூலத்திற்குள் உள்ளடக்க முயற்சிக்கிறது" என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

"PTA சட்டத்திற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகக் கூறப்படும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் (PSTA), சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக-ளிடம் வழங்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள அனுமதிக்கும் ஏற்பாடுகளை நீக்கும்" என்று கூறும் அவர், "PTA சட்டத்தின் கீழ் இத்தகைய ஒப்புதல் வாக்குமூலங்கள் பயன்படுத்தப்பட்டமை, பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் துறையினரிடை-யே சித்திரவதைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கான ஒரு சூழலை உருவாக்கியுள்ளதாகவும்" குற்றம் காட்டுகிறார்.

"எனினும், அரசாங்கத்தினால் தனியாக முன்மொழியப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான சட்டமூலம், உதவிப் பொ-லிஸ் அத்தியட்சகர் (ASP) பதவியிலிருந்து அதற்கு மேற்பட்ட பதவிகளிலுள்ள பொலிஸ் அதிகாரிகள-ிடம் வழங்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான சாட்சியங்களாகப் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலம், அதேபோன்ற ஏற்பாடுகளை மீண்டும் கொண்டுவர முயற்சிப்பதாகவும்" சாலிய பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

எனினும் மேற்சொன்ன துறைசார் நிபுணர்கள், அறிவுஜீவிகள் ஆகியோரின் குற்றச்சாட்டுகள் விமர்சனங்கள் எதிர்ப்புகள் எல்லாவற்றையும் மீறி அரசாங்கம் இப்பொழுது மேசையில் வைத்துள்ள சட்டங்களை சில திருத்தங்களோடு அல்லது திருத்தங்கள் இல்லாமலேயே நிறைவேற்றப்படும் ஆபத்து அதிகம் உண்டு.

சில ஆண்டுகளுக்கு முன்பு தன்னெழுச்சிப் போராட்டத்தில் ஈடுபட்ட அரச-ியல் செயற்பாட்டாளர்கள் இணைந்து புதிய சட்டமூலத்திற்கு எதிராக தொடர்ந்து போராடி வருகிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் மேற்படி சட்டமூலங்களுக்கு எதிராக ஆங்காங்கே போராடி வருகிறார்கள்.

யார் போராடினாலும், போராடவிட்டாலும் மேற்படி சட்டமூலங்களை நிறைவேற்ற தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசாங்கத்திடம் உண்டு. இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்து அரசாங்கம் விரும்பிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும். எனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது என்பதற்காக அந்தச் சட்டம் மக்களுக்கு, குறிப்பாக சிறிய தேசிய இனங்களுக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்று இல்லை.

எல்லா நாடுகளிலும் சட்டம் எனப்படுவது அங்குள்ள பெரும்பான்மை பலத்த கொண்ட அரசாங்கத்தால் நிறைவேற்றப்படுகிறது. அது சொர்க்கத்தில் நிறைவேற்றப்படுவது அல்ல. சட்டங்களை அரசியல்வாதிகள்தான் நிறைவேற்றுகிறார்கள். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக யார் இருக்கிறார்களோ அவர்கள் வைத்ததுதான் சட்டம்.

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கூரான கத்தி ஆகிய பயங்கரவாதத் தடைச் சட்டமும் அப்படித்தான். அவசர காலச் சட்டமும் அப்படித்தான். இப்பொழுது அரசாங்கம் மேசையில் வைத்திருக்கும் சட்டமூலங்களும் அப்படிப்பட்டவை தான். தமிழ் மக்கள் மக்களுடைய எதிர்ப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்களுக்குச் சட்டங்கள் தேவை. அது பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகவும் இருக்கலாம் அவசரகாலச் சட்டமாகவும் இருக்கலாம்ஏன் பெருந் தொற்று நோய் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டமாகவும் இருக்கலாம்.

அதனால்தான் சட்டப்படியானவை எல்லாம் அல்லது "சட்டரீதியானது என்பது நீதியின் பார்ப்படட ஒரு விடயம் அல்ல, அது அதிகாரத்தின் பாற்பட்ட ஒரு விடயம்" என்று ஓர் ஆங்கில வாசகம் உண்டு. "Apartheid was legal. The Holocaust was legal. Slavery was legal.Colonialism was legal. Legality is a matter of power, not justice" - "அடிமைமுறை சட்டப்படிதான் முன்னெடுக்கப்பட்டது. குடியேற்றவாதம் சட்டப்படிதான் முன்னெடுக்கப்பட்டது. ஜெர்மனியில் யூதர்களுக்கு எதிரான இன அழிப்பு சட்டப்படிதான் முன்னெடுக்கப்பட்டது. தென்னாபிரிக்காவில் இனஒதுக்கல் சட்டப்படிதான் முன்னெடுக்கப்பட்டது". இலங்கையிலும் தமிழ் மக்களுக்கு எதிரான போர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் வேட்டை பற்களுக்குள் சிக்கித் தப்பிப் பிழைத்த ஜேவிபிதான் இப்பொழுது அரசாங்கத்தின் அடித்தளமாக இருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் போரா-டியபோது ஜேவிபியும் அவர்களோடு காணப்பட்டது. அதே ஜேபிபியை அடித்தளமாகக் கொண்ட தேச-ிய மக்கள் சக்தி அரசாங்கம் இப்பொழுது நாட்டை ஆள்வதற்கு ஒரு புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றது.

"இன அடிப்படையிலான தேசியவாதம் நம் நாட்டில் இன்னும் மறைந்திருக்கிறது: அது முழுமையாக ஒழியவில்லை" என்று வி-வசாயம், கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசனத் துறைகளுக்கான அமைச்சர் கே.டி. லால் கந்த கூறியுள்ளார். "வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், அதை மீண்டும் உயிர்ப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை எவரும் காண-முடியும்." "இது மீண்டும் தலைதூக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்"..."இத்தகைய போக்குகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்தடுக்கப்பட வேண்டும்." என்றும் அமைச்சர் லால் கந்த தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு அடித்தளமாகக் காணப்படும் ஜேவிபியின் தீர்மானிக்கும் சக்திகளில் லால் கந்தவும் ஒருவர். அவர் கூறுவதுதான் அரசாங்கம் மேசையில் வைத்திருக்கும் சட்ட மூலங்களின் மெய்யான நோக்கம் ஆகும்.நாடாளுமன்றத்தில் யார் பெரும்பான்மையாக இருந்தாலும் அவர்கள் எல்லாரும் ஒரு விடயத்தில், அதாவது தமிழ் மக்களின் தேசிய இருப்பை இல்லாமல் செய்யும் விடயத்தில், மிகத்தெளிவாக முடிவெடுப்பார்கள் என்பதைத்தான் அமைச்சர் லால் கந்தவின் கூற்று வெளிப்படுத்துகின்றதா?





# "செம்மணி மனிதப் புதைகுழி தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவால் உருவானதாக இருக்கலாம்!" என நீதிமன்றில் ராஜ் சோமதேவ அறிக்கை தாக்கல் செய்தார்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## பேராசிரியர் ராஜ் சோமதேவ ஒரு "பைத்தியமாக" இருக்கலாம்! என மக்கள் விசனம்!

சர்ச்சைக்குரிய செம்மணி மனிதப் புதைகுழியின் பின்னணியில் தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்பன காரணமாக இருந்திருக்கலாம் என்றும், அங்கு முறையான இறுதிச் சடங்குகள் இடம்பெற்றதற்கான சில குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் தென்படுகின்றன என்றும் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

செம்மணிப் புதைகுழி அகழ்வாராய்ச்சி தொடர்பான தடயவியல் அறிக்கையைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் 19ம் திகதி திங்கட்கிழமை சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பைத்தியகாரத்தனமான அம்சங்களாவன: "செம்மணிப் புதைகுழியானது உலகின் பல பகுதிகளில் கண்டறியப்பட்ட சர்ச்சைக்குரிய மனிதப் புதைகுழிகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காண்பிக்கின்றது. முறையான வழமையில் அடக்கம் செய்யப்படும் சூழமைவுகளுடன் ஒப்பிடுகையில் இந்தப் புதைகுழி குறிப்பிட்டுக் கூறக்கூடிய அதிக ஒற்றுமைகளை வெளிப்படுத்துகின்றது.

இங்கு அதிகளவிலான எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டபோதிலும், சடலங்கள் எந்தச் சூழ்நிலையில் அடக்கம் செய்யப்பட்டன என்பதை துல்லியமாக நிரூபிப்பதற்குத் தேவையான வலுவான ஆதாரங்கள் எதுவும் தென்படவில்லை.

அதிகளவான என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டமைக்குக் காரணம், இதன் பின்னணியில் தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்பன இருந்திருக்கக்கூடும். இதனால் சடலங்களைச் சாதாரண வழியில் அப்புறப்படுத்துவதைக் காட்டிலும் அதிவிரைவாக அப்புறப்படுத்த வேண்டிய தேவை அக்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம்.

இறுதிச் சடங்கில் பயன்படுத்தப்படும் பொருள்கள் அதிகளவில் மீட்கப்படாமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். இருப்பினும், இதுவரை மீட்கப்பட்ட சில தடயங்கள் அங்கு முறைப்படி இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன என்பதையே வெளிப்படுத்துகின்றன.

செம்மணியில் அகழாய்வு செய்யப்பட்ட மனித எலும்புக்கூடுகளுடன் நேரடியாக இணைந்த நிலையில் ஆடைகளுக்கான சான்றுகள் கிடைக்கவில்லை. இருப்பினும், துணிகள் சிதைவடைந்திருக்கலாமே தவிர, அவர்கள் ஆடையின்றி அடக்கம் செய்யப்பட்டனர் என்று பொருள்கொள்ள முடியாது.

துணிகள் போன்ற கரிமப் பொருட்கள் மண்ணின் இரசாயனத் தன்மை, ஈரப்பதம், நுண்ணுயிர்களின் தொழிற்பாடு மற்றும் கால அளவு காரணமாகச் சிதைவடையக்கூடியவை. மேலும், சில எலும்புக்கூடுகளுக்கு அருகில் பொத்தான்கள், பொத்தான் வளையங்கள் மற்றும் சிறிய உலோகப் பொருத்திகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை அடக்கம் செய்யப்பட்டபோது அவர்கள் ஆடை அணிந்திருந்தனர் என்பதற்கான ஆதாரங்களாகும்.



எனவே, துணி எச்சங்கள் கிடைக்காத நிலையை ஆடைகள் இல்லாதிருந்ததற்கான உறுதியான சான்றாகக் கருதாமல், காலப்போக்கில் ஏற்பட்ட சிதைவாகவே கொள்ள வேண்டும்." - என்று அந்த பைத்தியகாரத்தனமான அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.



# அநுர அரசாங்கத்துக்குள் எந்தப் பிளவும் இல்லை!

## மிகவும் பலமாகவே செயற்படுகின்றது என்று பதிலடி கொடுத்த பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

இன்றைய அரசு மிகவும் பலமாகவும் வலுவாகவும் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபைத் தலைவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் சேவையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணிகளில் அரசு மும்முரமாக ஈடுபட்டுள்ள நிலையில், எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் மற்றும் வீணான பேச்சுக்களுக்கு அரசாங்கம் எவ்வித தடைகளையும் விதிக்கவில்லை. எதிர்க்கட்சிகள் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருக்கட்டும்." - என்றார்.

தேசிய மக்கள் சக்திக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளது என்று எதிரணிகளால் கூறப்படும் கருத்துக்கள் குறித்து தெளிவுபடுத்திய அவர், "அரசு ஆட்சிக்கு வந்தவுடன் தேசிய மக்கள் சக்திக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படும் செய்திகள் முற்றிலும் தவறானவையாகும். மக்கள் விடுதலை முன்னணி கட்சியைப் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவும், நாட்டை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவும் இணைந்து ஒரு குடும்பமாக, ஒற்றுமையாக வழிநடத்துகின்றனர். எனவே கட்சிக்குள் எந்தவிதமான பிளவுகளும் பிணக்குகளும் கிடையாது." - என்றார்.

மேலும் சர்வதேச உறவுகள் மற்றும் மக்கள் ஆதரவு குறித்து அவர் கூறுகையில், "நாளுக்கு நாள் அரசுக்குச் சர்வதேச நாடுகளின் ஆதரவு பெருமளவில் கிடைத்து வருகின்றது. அண்மையில் சிவராசா அனோஜனின் மரண தண்டனையிலிருந்தான விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு நேர்மறை நகர்வுகளால் சர்வதேச மட்டத்தில் நாட்டுக்குரிய மதிப்பும், அரசின் மீது வெளிநாட்டு அமைப்புகள் மற்றும் தலைவர்களின் நம்பிக்கையும் அதிகரித்துள்ளது.

உண்மையான ஆட்சியை இந்த நாட்டு மக்களே கொண்டு வந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் அரசுக்கு ஆதரவாகத் திரள்வதை எதிர்க்கட்சிகளால் ஒருபோதும் தடுக்க முடியாது." - என்றார்.

# மன்னாரில் யானைச் சவாரி மற்றும் வன சுற்றுலா ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது

திருகோணமலை ஹபரண மற்றும் யாகலை சரணாலயங்களில் உள்ளது போன்ற சுற்றுலா பயணத்தை மன்னாரிலும் அமைப்பது தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலக அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வுகள் செய்தனர். திருகோணமலை ஹபரண யானைச் சவாரிபோன்று மன்னார் மடுப் பகுதியில் அமைப்பதற்கு 21ம் திகதி அன்றைய தினம் ஹபரணப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.



இதேபோன்று யால கடல் பகுதியில் வாகனங்களில் சென்று வன விலங்குகளை பார்வையிடும் ஏற்பாட்டை வில்பத்து முதல் சிலாவத்தை வரையான காட்டுப் பகுதியில் முன்னெடுக்கும் நோக்கிலும் நேரில் சென்று ஆராயப்படுகின்றது.

இந்தப் பயணத்தின்போது மன்னார் மாவட்ட அரச அதிபர், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், சுற்றுலா அதிகார சபை உள்பட பலரும் பயணிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

# கிளிநொச்சியில் இயங்கிவரும் கருவுறுதல் திட்டத்திற்கு கனடிய தமிழ்ச் சமூகத்தின் ஆதரவு அதிகரிக்க வேண்டும்!

## மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் கோரிக்கை

வட இலங்கையில் கருவுறுதல் தொடர்பான சவால்களை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பெற்றுள்ள கிளிநொச்சி கருவுறுதல் (Fertility/IVF) திட்டத்திற்கு மார்க்கம் நகரில் இயங்கிவரும் கிரீன்ஸ்பரோ மூத்தோர் நலச்சங்கமும் சமூக உறுப்பினர்களும் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

சமீபத்தில் நடைபெற்ற நிதி திரட்டும் முயற்சியின் போது, கிரீன்ஸ்பரோ மூத்தோர் நலச்சங்கத்தின் சார்பில் திருமதி செல்வா அருள்ராஜசிங்கம், கனடாவில் இயங்கும் யாழ்ப்பாண மருத்துவ பீட பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர் தமிழ்வாணனிடம் $1,000 நன்கொடைக் காசோலையை வழங்கினார்.

அதேவேளை, ரகுநாதன் மற்றும் கனகரெத்தினம் குடும்பத்தினரும் $1,000 நன்கொடையை MPP லோகன் கணபதியிடம் வழங்கினர். இவ்விரு நன்கொடைகளும் இணைந்து திட்டத்திற்காக $2,000 நிதியை பெற்றுக்கொடுத்துள்ளன.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடமும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையும் இணைந்து முன்னெடுத்து வரும் இந்த திட்டத்தின் ஆண்டு செயல்பாட்டு செலவு சுமார் $25,000 ஆகும். டாக்டர் ரகுராமனின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த முயற்சியின் வழியாக, கருவுறுதல் சிக்கல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மலிவான மற்றும் அணுகக்கூடிய சிகிச்சை மற்றும் IVF சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



வட மாகாணத்தில் சுமார் ஐந்தில் ஒரு தம்பதியினர் கருவுறுதல் சவால்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதால், இந்த சேவையின் தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதை கருத்தில் கொண்டு, கிளிநொச்சியில் குறைந்த செலவில் கருவுறுதல் சிகிச்சை மற்றும் IVF வசதி நிறுவப்பட்டுள்ளது.

நன்கொடையாளர்களின் தாராள மனப்பான்மைக்கு நன்றி தெரிவித்த MPP லோகன் கணபதி, கிரீன்ஸ்பரோ மூத்தோர் நலச்சங்கத்தினரையும் ரகுநாதன் மற்றும் கனகரெத்தினம் குடும்பத்தினரையும் பாராட்டினார். அவர்களின் பங்களிப்பு, கருவுறுதல் சவால்களை எதிர்கொள்ளும் பல குடும்பங்களுக்கு நம்பிக்கையையும் ஆதரவையும் வழங்கும் இந்த முக்கிய சேவையை தொடர்ந்து முன்னெடுக்க உதவும் என்று அவர் தெரிவித்தார். *- UTHAYAN LJI Journalist Ganesh -*



Joe Re-elect
LI
www.joeli.ca

For Markham Regional Councillor
Voting Days: October 16 - 26, 2026

JOE LI'S CURRENT REGIONAL COUNCILLOR TERM 2022–2026
City of Markham
- **Chair,** Development Services Public Meeting
- **Vice-Chair,** Development Services Committee - Planning – Development & Policy
- **Chair,** Public Hearings
- **Chair,** Milliken Sub-committee

York Region
- **Vice-Chair,** Public Works – Environmental Services
- **Director,** Toronto & Region Conservation Authority
- Human Services Planning Board of York Region
- Committee at large

ABOUT JOE LI
- First Hakka Chinese from India elected to public office in Markham
- Elected to Markham and York Region Council since 2010
- Successful entrepreneur and financial professional
- Speaks in English, Swedish, Hindi and Chinese (Mandarin, Cantonese, and Hakka)
- Advocate for cultural diversity, charities, and community organizations
- Represents Markham through global partnerships and trade missions
- Married with 3 children
- Awarded King Charles III Coronation Medal for Community Service
- Queen Elizabeth II Platinum Jubilee Community Service Award
- Canada Strong Medal Award for Outstanding Community Service

Donations Welcome
Personal Cheque: Joe Li for Markham Regional Councillor 2026
Mailing Address: 69 Wozniak Cres, Markham ON L6E 0L4
E-Transfer: reelectjoeli@gmail.com

Campaign Office
18 Crown Steel Drive, Unit #108, Markham ON L3R 9X8
Phone#: 647-479-8738 Email: Joeli@Joeli.ca

VOTE JOE LI

Register to Vote
www.markham.ca/elections

COMMUNITY LEADERS SUPPORT JOE LI



Joe's experience, dedication, and vision make him a strong advocate for Markham's diverse and growing community. As a former colleague at Markham Council, I am proud to endorse his re-election as Markham Regional Councillor.
**Member of Parliament (MP) Juanita Nathan, Pickering–Brooklin**



For 16 years at York Regional Council, Joe Li has demonstrated strong leadership and an unwavering commitment to ethical public service. As a colleague, I can attest that Regional Councillor Joe Li is a man of integrity, honesty, and consistency. I am proud to support Joe Li's re-election as Markham Regional Councillor, and I look forward to working with him again at York Regional Council.
**Steve Pellegrini, Mayor of King**



Joe Li has served Markham and provided veteran leadership for 16 years. His management skills and enthusiasm for Markham will surely be required in the coming term.
**John Gray, 30 year resident of Unionville**



I have known Joe for 40 years. He takes nothing for granted and works hard for our City of Markham and our residents. I support Joe's re-election for Regional Councillor. Please make your choice count, our future depends on it.
**Pat Sage, 37 year resident of Unionville**



I'm proud to endorse Joe Li for re-election to Regional Council. I've known Joe for many years and had the opportunity to work alongside him with my husband. I know him to be dedicated, hardworking and committed to our community. I'm pleased to support Joe as he seeks another term on Regional Council.
**Alicia Chiu, Prominent Filipino Community Leader**



I have known Joe Li for almost 30 years even before his election to the Markham Council. Joe deserves your support because he is always concerned with the well being of the community and strives to develop our city as the best place to work and live. As a Markham resident and business owner, Joe has my vote and please follow me to send Joe Li to Council again!
**Kenny Wan, Kenny Wan CPA Professional Corporation**



I have known Joe Li for over 20 years. He has always been approachable, sincere, and deeply committed to our community. Whether supporting community events, local initiatives, or individuals in need, Joe is always there. His dedication to serving others extends far beyond election time and has remained consistent for decades. Joe's experience, integrity, and genuine love for the community make a lasting difference.
**Yan Liu, Lawyer, Y. Liu Law Firm**



Joe Li brings the leadership, vision, and fresh ideas needed to move Markham confidently into the future. His energy, experience, and commitment to our diverse and growing community make him a strong advocate for a more inclusive, innovative, and prosperous Markham.
**Pravin Gandhi, Vice-President Sanatan Mandir Cultural Centre, Prominent Indian Community Leader**

# இந்திய அரசின் நிதியுதவியுடன் காலியில் அமைக்கப்பட்ட 22வது மாதிரி கிராமம் பயனாளிகளிடம் ஒப்படைப்பு





இந்திய அரசின் நிதியுதவியுடன் காலி மாவட்டத்தில் “திடுலா“ (Didula) மாதிரி கிராமத்தில் நிர்மானிக்கப்பட்ட 24 வீடுகள் 22ம் திகதி வியாழக்கிழமை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரு. சந்தோஷ் ஜா மற்றும் வீடமைப்பு, கட்டுமானம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் டாக்டர் எச்.எம். சுசில் ரணசிங்க ஆகியோர் இணைந்து, திறந்து வைத்து, பயனாளிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த மாதிரி கிராம வீடமைப்புத் திட்டம், இந்திய அரசின் நிதியுதவியுடன், இலங்கையின் வீடமைப்பு, கட்டுமானம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சகத்துடன் இணைந்து நாட்டின் அனைத்து 25 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017 அக்டோபரில் இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையே கையெழுத்தானது.

இத்திட்டத்தின் கீழ், இலங்கையில் குறைந்த வருமானம் கொண்ட 600 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 24 வீடுகளைக் கொண்ட மாதிரி கிராமங்கள் அமைக்கப்படுகின்றன இதற்கான பயனாளிகள் அந்தந்த மாவட்ட வீடமைப்பு குழுக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இவ்வாறு இந்தத் திட்டத்தின் கீழ், ஏற்கனவே மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், கண்டி, கம்பஹா, அனுராதபுரம், பதுளை, மாத்தளை, புத்தளம், கொழும்பு, திருகோணமலை, மொனராகலை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, இரத்தினபுரி, அம்பாறை, குருநாகல், கேகாலை, களுத்துறை மற்றும் பொலன்னறுவை ஆகிய 21 மாவட்டங்களில் மாதிரி கிராமங்கள் திறந்து வைக்கப்பட்டு, பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் பணிகள் சுமார் 98.6 வீதம் நிறைவடைந்துள்ள நிலையில், மீதமுள்ள மூன்று மாதிரி கிராமங்களும் விரைவில் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்தத் திறப்பு விழாவில், அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள், மற்றும் காலி மாவட்ட நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டை மாற்ற வேண்டும் என நினைத்தால் நாம் முதலில் நமது நடத்தையை மாற்றவேண்டும் என வடக்கின் ஆளுநர் தெரிவிப்பு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்




நாட்டை மாற்ற வேண்டும் என நினைத்தால், முதலில் நமது நடத்தையை மாற்றுவோம். நாளைய தலைவர்களாகக் காத்திருக்காமல், இன்றைய மாற்றத்துக்கான முன்னுதாரணங்களாக இளைஞர்கள் திகழ வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

“தூய இலங்கை“ (Clean Sri Lanka) செயற்றிட்டத்தின் கீழ், தீவக வலயக் கல்வி அலுவலகத்தின் பங்களிப்புடன் நடைபெற்ற “அடுத்த தலைமுறைத் தலைவர்கள்“ (Next Gen Leaders) தலைமைத்துவப் பயிற்சிச் செயலமர்வு 21ம் திகதி அன்று புதன்கிழமை புங்குடுதீவு மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

வீதிகள் சுத்தமாக இருக்க வேண்டும், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும், பாடசாலைகள் சிறந்து விளங்க வேண்டும், அரச அலுவலகங்களில் பணிகள் விரைவாக நடைபெற வேண்டும் என அனைவரும் விரும்புகின்றனர். ஆனால், அந்த மாற்றத்துக்காகத் தமது சிறிய பங்களிப்பை வழங்க வேண்டிய நேரத்தில் பலர் தயங்குகின்றனர். மாற்றத்தை அரசாங்கத்தின் திட்டங்களால் மட்டும் ஏற்படுத்த முடியாது, மக்களும் தமது நடத்தையை மாற்றிக்கொள்ள வேண்டும் என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

“தூய இலங்கை“ செயற்றிட்டம் சுற்றாடல் தூய்மையை மட்டுமன்றி, சமூகப் பொறுப்புணர்வு, ஒழுக்கம், நேர்மை மற்றும் பிறரை மதித்தல் ஆகிய பண்புகளையும் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்த மாற்றத்தை உருவாக்குவதில் இளைய தலைமுறையினருக்கு முக்கிய பங்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்வியறிவு மட்டுமே ஒருவரைச் சிறந்த தலைவராக்கிவிடாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு, துணிவுடன் முடிவெடுக்கும் திறன், பிறரது துயரத்தைப் புரிந்துகொள்ளும் இரக்கம் ஆகியவையே உண்மையான தலைமைத்துவத்தின் அடிப்படைகள் என்றார். பிறரது நேரத்தையும் சிரமங்களையும் மதித்தல், தவறுகளை ஒப்புக்கொண்டு திருத்திக்கொள்ளுதல், பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றையும் மாணவர்கள் தமது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

“ஒரு நல்ல தலைவர் எத்தனை பேர் அவருக்குப் பின்னால் வருகின்றனர் என்பதால் மதிப்பிடப்படுவதில்லை அவரது தலைமைத் துவத்தால் எத்தனை பேரின் வாழ்க்கை மேம்படுகிறது என்பதாலேயே மதிப்பிடப்படுகிறார்“ எனத் தெரிவித்த ஆளுநர், மாணவர்கள் தமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்வதுடன், வாய்ப்புகள் கிடைக்காத மற்றவர்களுக்கும் உதவ முன்வர வேண்டும் என்றார்.

தலைமைத்துவம் எதிர்காலத்தில் ஒரு பதவியைப் பெறும்போது ஆரம்பிப்பதில்லை. வகுப்பறையில், விளையாட்டு மைதானத்தில், வீட்டில், கிராமத்தில் நாம் நடந்துகொள்ளும் விதத்திலிருந்தே அது ஆரம்பிக்கிறது. எனவே, இச்செயலமர்வில் கற்றுக்கொள்ளும் விடயங்களில் ஒன்றையாவது உடனடியாகத் தமது வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும். நடத்தையில் ஏற்படும் ஒரு சிறிய மாற்றமே இந்நிகழ்வின் உண்மையான வெற்றியாக அமையும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் லெனின் அறிவழகன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



# செம்மணி புதைகுழிகள் விவகாரத்தை யாரும் பூசிமெழுக அனுமதிக்க முடியாது என ஈ.பி.டி.பி. வலியுறுத்துகின்றது!




**செம்மணி பற்றிய விசாரணைகள் பூசி மெழுகுகின்ற சூழல் உருவாகுவதை எந்தவகையிலும் அனுமதிக்க முடியாது. எனவே, தென்னிலங்கையிலே தற்துணிவோடு சில நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாக்க தலைமையிலான இந்த அரசாங்கம் செம்மணி விவகாரத்திலும் விசேட கவனத்தை செலுத்தி உண்மைகள வெளிவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

-------------------------------

செம்மணி மனித எச்சங்கள் தொடர்பாக ஊகங்களை வெளியிட்டு அதனை யூசிமெழுகும் சூழலை உருவாக்க கூடாது என்று வலியுறுத்தியுள்ள ஈ.பி.டி.பி. ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந்த் பன்னீர்செல்வம், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தற்துணிவோடு இந்த விவகாரத்தில் கரிசனை செலுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண. ஊடக மையத்தில் 21ம் திகதி புதன்கிழமை அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: “செம்மணியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் ராஜ் சோமதேவா அவர்களின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற வேளையில் எமது கட்சி இந்த முக்கியமான அறிகைகைய வெளியிடுகின்றது.

குறித்த அறிக்கையில் மீட்க்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக பல்வேறு விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் குறித்த மனித எச்சங்கள் இயற்கை பேரிடர் காரணமாக அல்லது தொற்று நோய் காரணமாக ஏற்பட்டவையாக இருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கருத்தானது ஆழமாக சிந்திக்கப்பட வேண்டிய விடயமாக காணப்படுகின்றது. இவ்வாறான கருத்துக்கள் செம்மணியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் பற்றிய வீரியத்தினை குறைத்து விடுமோ என்ற அச்சத்தினை ஏற்படுத்துகின்றது.

கடந்த காலங்களிலும் இந்த பல்வேறு இடங்களிலே மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அவை தொடர்பாக விடயங்கள் பேசு பொருளாக இருந்த போதிலும் காலவோட்டத்தில் அவை பற்றிய மக்களின் வீரியமான அவதானிப்பு திசை திருப்பப்பட்டு விசாரணைகள் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதை அவதானிக்கின்றோம்.

உதாரணமாக, சில வருடங்களுக்கு முன்னர் மன்னால் நகரப் பகுதியிலே சதோச கட்டடிட்திற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது, அங்கே மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அது மக்கள் மத்தியில் பேசுபொருளாக இருந்த நிலையில் அங்கு அகழ்வு ஆராய்ட்சிள் முன்னெடுக்கப்பட்டு பல நூற்றக்கணக்கான மனித எச்சங்ககள் புதைக்கப் பட்டிருப்பது கண்டறிப்பட்டது.

இருந்தாலும் ஒரு கட்டத்தில் குறித்த மனித எச்சங்கள் மன்னர் காலத்துக் குரியவையாக இருக்கலாம் இதனனோடு எல்லாள மன்னனுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற ஊகம் வெளிப்படுத்தப்பட்ட நிலையில், அந்த விவகாரத்தில் மக்களின் அக்கறை குறைவடைய, அதுபற்றிய ஆய்வுகள் ஏறக்குறைய கைவிடப்பட்ட நிலையில் இருப்பதையே அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

அவ்வாறான ஒரு நிலை செம்மணி விவகாரத்திற்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதே எங்களுடைய அக்கறையாக இருக்கின்றது. எங்களைப் பொறுத்தவரையில் ஊகத்தின் அடிப்படையில் எந்தவிதமான கருத்துக்களும் வெளிப்படுத்தக் கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

பேராசிரியர் ராஜ் சோமதேவா தரப்பினர் ஊகிப்பது போன்ற வாய்ப்புக்கள் இருந்தாலும் அவை விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வெளிப்படுத்தப்பட வேண்டும். முதலிலே செம்மணியிலே புதைக்கப்பட்ட மனித எச்சங்கள் எந்தக் காலப் பகுதியில் புதைக்கப்பட்டவை என்ற கால வரையறைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையில், 70, 80, 90, ஆம் ஆண்டுகளிலே இந்த மண்ணிலே வாழ்ந்த தலைமுறையினர் இந்த மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தக் காலப் பகுதியில் இந்த மண்ணில் பாரிய இயற்கை பேரிடர்களோ, நூற்றுக்காணக்கான உயிர்களை பலியெடுத்த தொற்று நோக்களோ இடம் பெற்றிருக்கவில்லை. அவ்வப்போது செய்றகை பேரிடர்தான் நடைபெற்றிருக்கின்றது.

இவர்கள் கூறுவது போது இயற்கை பேரிடர் மற்றும் தொற்றுநோய் காரணமாக உயிரிழந்தவர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றால், அது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றவையாக இருக்க வேண்டும்.

அவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தாலும் அங்கு மீட்கபட்பட மனித எச்சங்கள் அனைத்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்க முடியாது.

கணிசமானவை 90களுக்கு பிற்பட்ட காலத்தில் புதைக்கப்பட்டவையாக இருப்பதற்கான வாய்ப்புக்ள் இருக்கின்றன. 96 ஆண்டு காலப் பகுதியிலே இந்தப் பகுதியிலே 850 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமால் போயிருக்கின்றார்கள் என்பதற்கு பதிவுகள் இருக்கின்றன.

அவ்வாறு, காணால் போனவர்களில் கணிசமானவர்களுக்கு என்ன நடந்து என்று தெரியாமல் அவர்களின் உறவுகள் இன்றும் இந்த மண்ணிலே துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். காணாமல் போனவர்களின் உறவினர்களை ஒரு கட்டமைப்பாக உருவாக்கி, முதன்முதலில் காணாமல்போனோர் சங்கத்தினை உருவாக்கியர்வர்கள் நாங்கள்.

இந்த அநியாயத்தை பல்வேறு தளங்களிலும் பேசுபொருளாக்கி காணமல் போதலை கட்டுப்படுத்தியதில் ஈ.பி.டி.பி.க்கு கணிசமான பங்கு இருக்கின்றது. அதனை யாரும் மறைக்க முடியாது.

அதேபோன்று கிருஷாந்தி கொலை வழக்கிலே குற்றவாளியாக அடையாளம் காண்பட்ட சோமரத்ன ராஜபக்ஷவும் இதனை வெளிப்படுத்தி இருக்கின்றார். இதன்மூலம் சில உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதேவேளை, தற்போது, அரசியல் பிழைப்பு நடாத்திக் கொண்டிருக்கின்ற சில தரப்புக்கள், இந்த மண்ணிலே காணாமல்போவதை கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக மானசீகமாக உழைத்த எம் மீது குற்றசாட்டுக்களை முன்வைத்து பிதற்றுகின்ற கேலிக் கூத்துக்களையும் அவதானித்துக் கொண்டு இருக்கின்றோம்.

இவ்வாறான போக்கிரித்தனங்கள் அனைத்தும் முடிவிற்கு கொண்டு வரப்படவேண்டும். இருண்ட மாளிகை என்றும், பேய்கள் நடமாடித் திரிகின்ற கூடாமா-கவும், ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கின்ற களஞ்சியாகமவும் ஸ்ரீதர் தியேட்டர் தொடர்பாக கட்டமைக்கப்பட்டிருந்த பிம்பங்கள் எவ்வாறு சுக்குநூறாக்கப்பட்டிருக் கின்றனவோ, செமமணி பற்றிய உண்மைகளும் வெளிக்க கொணரப்பட வேண்டும்.

பாதிக்கப்ப்பட்ட மக்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும். ஆதற்கு செம்மணி பற்றி விசாரணைகள் சரியான திசையில் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட வேண்டும். எனவே செம்மணி பற்றிய விசாரணைகள் பூசி மெழுகுகின்ற சூழல் உருவாகுவதை எந்தவகையிலும் அனுமதிக்க முடியாது.

எனவே, தென்னிலங்கையிலே தற்துணிவோடு சில நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாக்க தலைமையிலான இந்த அரசாங்கம் செம்மணி விவகாரத்திலும் விசேட கவனத்தை செலுத்தி உண்மைகள வெளிவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

யாரையாவது காப்பாற்ற வேண்டும், யாரையாவது காட்டிக் கொடுத்த அவப்பெயர் ஏற்பட்டு விடக்கூடாது என்ற நிலைப்பாட்டில் செம்மணி விடயத்தில் நழுவை போக்கை கடைப்பிடிக்காமல் தற்துணிவான அறிவுறுத்தல்களை சம்மந்தப் பட்டவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம்.





Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திடடமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.



Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24






VJ PRODUCTIONS
IN ASSOCIATION WITH
VIJAYA JEWELLERY
PRESENTS
VJ PRODUCTIONS
Vijaya Jewellery
TITLE SPONSOR
VIBRANT HOSPITALITY GROUP
Makka
LIVE IN TORONTO
POWERED BY
GTA COACH
YOUR TRUSTED TRAVEL PARTNER SINCE 1989
EVENT SPONSOR
YORK
PRIMA
New Nanthu's Kitchen
HI FI BARBERSHOP
THE CHOP SHOP
GOLD SPONSOR
LOEI THAI
SILVER SPONSOR
GS CAPITAL GROUP
EXCLUSIVE RADIO PARTNER
east FM 102.7
SASITHA SUYATHARAN Mortgage Broker
Academy of Learning
McCowan / 401 North
LAND KING
JEGAN
DATE
SATURDAY, October 24TH 2026
TIME
5:30 PM
CANADA EVENT CENTRE
300 WATER ST, WHITBY, ON L1N 9B6
DOORS OPEN 5:30 PM | SHOW STARTS AT 6:00 PM
COLLABORATING WITH
TORONTO SINGERS & MUSICIANS

# திருந்தாத சஜித்தும் வருந்தாத பங்காளிகளும்!



*"சிறுபான்மையினரின் தோள்களில் கைபோட்டுக்கொண்டு, உள்ளுக்குள் அப்பட்டமான பேரினவாத, மதவாத அரசியலை முன்னெடுக்கும் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி இரட்டை வேடம் போட்டு வருகின்றமை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த மதவாத, இனவாத அரசியலை சஜித்துக்கு முட்டுக்கொடுக்கும் பங்காளிகளோ அல்லது பங்காளிகளாக இல்லாமல் சஜித் மீது ஒருதலைக்காதல் கொண்டுள்ளவர்களோ கண்டும் காணாதவர்கள்போல் இருப்பதும் பட்டும் படாமல் அறிக்கைவிடுவதும் சஜித்தும் திருந்தவில்லை அவரின் பங்காளிகளும் வருந்தவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது. இந்த வேடதாரியான சஜித் பிரேமதாசவுக்கும் அவரது கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும் முட்டுக்கொடுக்கும் பங்காளிகளாகவுள்ள கொழும்பை, மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முற்போக்கு கூடடணித் தலைவர்களான மனோகணேசன், இராதாகிருஷ்ணன், திகாம்பரமோ வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஶ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின் ரவூப் ஹக்கீம். அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸின் ரிஷாத் பதியுதீனோ அல்லது பங்காளிகளாக இல்லாமல் சஜித் மீது ஒருதலைக்காதல் கொண்டுள்ள சுமந்திரனோ சஜித்தின் இந்த இனவாத, மதவாத நடவடிக்கைகள் கண்டும் காணாதவர்கள்போல் இருப்பதும் பட்டும் படாமல் அறிக்கைவிடுவதும் சஜித்தும் திருந்தவில்லை அவரின் இந்த இரட்டை வேடத்தைப்பார்த்து இவர்களும் வருந்தவில்லை என்பது வெளிப்படுகின்றது."* ------------------------------------------------------------------------------------ **கே.பாலா -**

**ஐ**க்கிய மக்கள் சக்தியின் அரசியல் பயணம் என்பது சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை முறைகேடாகப் பயன்படுத்திய வரலாற்றைக் கொண்டது. மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளைத் தங்களின் "தேர்தல் பங்காளிகள்" எனப் பிரகடனப்படுத்தி, தமிழரசுக்கட்சியின் அரசியல் செல்வாக்கையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, சிறுபான்மை மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளையும் கவரும் சஜித் பிரேமதாசா, தேர்தல் முடிந்த மறுநிமிடம் பெரும்பான்மைவாத அஜண்டாவை நோக்கியே நகர்கிறார். "இனவாதமற்றவர்கள்" என்ற பிம்பத்தை போலித்தனமாகக் கட்டமைத்துக் கொண்டு, அதேவேளையில் பேரினவாதிகளை மற்றும் மதவாதிகளைத் திருப்திப்படுத்தும் வகையில் காய்களை நகர்த்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் இந்த துரோகத்தன அரசியல் இரட்டை நிலை மீண்டும் வெளிப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்று இரு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இந்த அரசாங்கத்தில் ஏற்பட்ட புத்த பெருமானின் முதல் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக திருகோணமலை சம்புத்தி ஜயந்த விகாரை புத்தர் சிலை பிரதிஷ்டை இடம்பெற்று இனவாத ஆக்கிரமிப்பாக அது இடம்பிடித்த நிலையில் இவ்விடயத்தில் பிக்குகளிடமும் பேரினவாதிகளிடமும் அநுரகுமார அரசாங்கம் அடிபணிந்தமை, தற்போது சிறையில் இருக்கும் ஞானசார தேரரின் காவியுடை தொடர்பில் மீண்டும் பிக்குகளிடமும் பேரினவாதிகளிடமும் அடிபணிந்தமை இந்த அரசாங்கத்துக்கு கறுப்பு புள்ளிகளாக அமைந்தாலும் இவ்வாறான சம்பவங்கள் மூலம் தமிழ் மக்களை தாம் "இனவாதமற்றவர்கள் என்ற முகமூடி" அணிந்து ஏமாற்றிக்கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடி வந்த "இரத்தத்திலேயே இனவாதம் கலந்த" பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியின் போலி முகமூடி மீண்டும் கிழிந்து போயுள்ளது.

சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் தீவிர இனவாத வெறுப்புப் பேச்சுகளைப் பேசிய ஞானசார தேரர் என்ற பிக்குவுக்கு ஆதரவாகச் சஜித் பிரேமதாச களம் இறங்கியுள்ளதுடன் தற்போது சிறையிலுள்ள ஞானசார தேரரின் விவகாரத்தை தற்போதைய அரசாங்கம் கையாளுவதன் மூலம், அவர்கள் சிறுபான்மை சமூகங்களின் (தமிழ் மற்றும் முஸ்லிம்) ஆதரவைப் பெற அல்லது அவர்களை திருப்திப்படுத்த முயற்சிப்பதாக அக்கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியான லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டி தமது கட்சியின் இனவாத முகத்தை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்தியுள்ளனர். இச்சந்திப்பின் போது லக்ஷ்மன் கிரியெல்ல சிறுபான்மை சமூகங்களைக் குறிக்க "சுலு ஜாதி" (சிறிய இனங்கள்) என்றும், பெரும்பான்மை சிங்கள மக்களைக் குறிக்க "மகா ஜாதி" (பெரிய இனம்) என்றும் இன ரீதியாகப் பிளவுபடுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தியமை தற்போது தமிழ், முஸ்லிம் மக்களிடத்தில் கொதி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இந்த வேடதாரியான சஜித் பிரேமதாசவுக்கும் அவரது கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும் முட்டுக்கொடுக்கும் பங்காளிகளாகவுள்ள கொழும்பை, மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முற்போக்கு கூடடணித் தலைவர்களான மனோகணேசன், இராதாகிருஷ்ணன், திகாம்பரமோ வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஶ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின் ரவூப் ஹக்கீம். அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸின் ரிஷாத் பதியுதீனோ அல்லது பங்காளிகளாக இல்லாமல் சஜித் மீது ஒருதலைக்காதல் கொண்டுள்ள சுமந்திரனோ சஜித்தின் இந்த இனவாத, மதவாத நடவடிக்கைகள் கண்டும் காணாதவர்கள்போல் இருப்பதும் பட்டும் படாமல் அறிக்கைவிடுவதும் சஜித்தும் திருந்தவில்லை அவரின் இந்த இரட்டை வேடத்தைப்பார்த்து இவர்களும் வருந்தவில்லை என்பது வெளிப்படுகின்றது.

இதில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், கண்டி மல்வத்து பீடாதிபதியிடம் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் வெளிப்படுத்தி இனவாதத்தை பின்வருமாறு கண்டிக்கின்றார். "கண்டி மல்வத்து பீடாதிபதியிடம் ஐக்கியம்மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல, தமிழ், முஸ்லிம், இலங்கையர்களை தொடர் படுத்தி பேசியமை கடும் தவறானது. அரசாங்கம், தமிழ் பேசும் மக்களை சந்தோஷ படுத்த, ஞானசாரர் விவகாரத்தை பயன் படுத்துகிறது என்ற பொருள் படும் கிரியல்லவின் கருத்து அதிக பிரசங்கிதனமானது. மேலும், சிறுபான்மை மக்களை "சுலுஜாதி", பெரும்பான்மை மக்களை "மகாஜாதி" என அடையாள படுத்துகின்றமை தவறு. கடந்த காலத்தின் பிளவுகளை ஏற்படுத்திய மொழிநடையை மீண்டும் உயிர்ப்பிக்காமல், சர்ச்சைக்குரிய விடயங்களை கூட்டாக கையாளும் எமது திறனிலேயே இலங்கையின் ஜனநாயக எதிர்காலம் தங்கியுள்ளது. தமிழ் பேசும் மக்களுக்கும், இவை தொடர்பில் பொது வெளிகளில் பேச வேண்டாம் என நான் ஏற்கனவே பொறுப்புடன் கோரி உள்ளேன். இவை இறுதியில் எங்கே போய் முடியும் என என் பட்டறிவுக்கு தெரியும்" எனக்கடிதம் அனுப்பினார்.

ஆனால் ஒரு சில தினங்களுக்குள்ளேயே மனோகணேசன் தனது முக நூல் பதிவில், "சஜித்பிரேமதாசவிடம் நான் காணும் சில நல்ல அறிகுறிகள். (சரி, பிழை, கண்டால் முகத்துக்கு முன்னே சொல்லிட வேண்டும் அல்லவா?) சற்றுமுன், அவரிடமே சொன்னேன் 1983-கறுப்பு ஜூலை குற்றங்களுக்கு நீங்கள் பகிரங்க மன்னிப்பு கோரினீர்கள்., 13ம் திருத்த சட்டத்தை முழுமையா அமுல் படுத்துவதாக உறுதி அளித்தீர்கள். 2024 தேர்தலுக்கு முன் நாம் பேசி, முடித்தபடி, எண்ணிக்கையில், குறைவான சமூகங்களை "சிறு சமூகம்" என்றும், எண்ணிக்கையில், அதிகமான சமூகத்தை "பெரிய சமூகம்" என்றும், குறிப்பிடாமல், "சக சமூகங்கள்" என குறிப்பிடுகிறீர்கள். பல சவால்களுக்கு மத்தியில் நிலைப்பாடுகளை அறிவிக்கிறீர்கள். இப்படியே போனால், வரலாறு ஒருநாள் தீர்ப்பளிக்கலாம். அது மக்கள் தீர்ப்பை விட மகத்தானது" என்று பாராட்டி புகழாரம் சூட்டுகின்றார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தனது ஆட்சியில் இராணுவத்திற்கே முன்னுரிமை. இராணுவத்தினர் பாதுகாக்கப்படுவார்கள் என சிங்களவர்களுக்கு சஜித் கொடுத்தக்குறுதியும், திருகோணமலை சம்புத்தி ஜயந்த விகாரை சர்ச்சையில் பௌத்த பிக்குகள் பௌத்த மதம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதையோ அல்லது உரிமைகளைப் பயன்படுத்துவதையோ எவரும் தடுக்க முடியாது. இலங்கையில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நாட்டின் எந்த மூலையிலும் விகாரைகள் அமைப்பதையோ அல்லது புத்தர் சிலைகள் வைப்பதையோ எதிர்ப்பது பௌத்த மதத்திற்கு எதிரானது என அவர் கூறியதோ, 2019 ஆண்டு ஜனாதிபதித்தேர்தலிலும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலிலும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு, கிழக்கு உட்பட, நாடு முழுவதும் 1000 விகாரைகள் கட்டுவேன் என சிங்கள மக்களுக்கு உறுதியளித்திருந்ததும் தனது தேசியப்பட்டியல் எம்.பி. பதவிக்காக மனோகணேசனுக்கு மறந்து போயிருக்கலாம்.

அதுமட்டுமல்ல சிறுபான்மையினங்களான தமிழ், முஸ்லிம்களுக்கு எதிரான கடும் இனவாதியும் மதவாதியுமான ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அவரின் காவி உடை களையப்பட்டு சிறை ஆடை வழங்கப்பட்டமைக்கு எதிராக பிக்குகளுடன் இணைந்து சஜித் பிரேமதாசாவும் அவரது கட்சியினரும் வீதிக்கு இறங்கியுள்ளதுடன் இனவாதத்தையும் மதவாதத்தையும் மீண்டும் கையில் எடுத்துள்ளனர் ஞானசார தேரர் சிறைவாசம் மற்றும் தண்டனைகளை எதிர்கொண்ட சூழலில், சஜித் பிரேமதாசவின் கட்சியினர் கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து பௌத்த பிக்குகள் கைது செய்யப்படுவதையும் சிறையில் அடைக்கப்படுவதையும் தடுக்க வேண்டும் என்றும், தற்போதைய அரசாங்கம் சிறுபான்மை சமூகங்களின் (தமிழ் மற்றும் முஸ்லிம்) ஆதரவைப் பெற அல்லது அவர்களை திருப்திப்படுத்த இவ்வாறான கைதுகளை மேற்கொள்வதாகவும் இதனால் பௌத்த சாசனத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியமையும் இச்சந்திப்பின் போதுசஜித் கட்சியின் மூத்த தலைவரான லக்ஷ்மன் கிரியெல்ல சிறுபான்மை சமூகங்களைக் குறிக்க "சுலு ஜாதி" (சிறிய இனங்கள்) என்றும், பெரும்பான்மை சிங்கள மக்களைக் குறிக்க "மகா ஜாதி" (பெரிய இனம்) என்றும் இன ரீதியாகப் பிளவுபடுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தியமையும் மனோகணேசனுக்கு மறந்திருக்கலாம். அதனால்தான் சஜித்தை புகழ்ந்து, பாராட்டி இப்படி ஒரு பதிவை தனது முக நூலில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியாக முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகனும் ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பிரதித்தலைவருமான சஜித் பிரேமதாசவை தலைவராகவும் தமிழ், முஸ்லிம் கட்சிகளைப் பங்காளிக் கட்சிகளாகவும் கொண்ட இந்தக்கட்சி தமது கட்சி அனைத்து மக்களுக்குமானது, இனவாதமற்றது என்று கூறிக்கொண்டாலும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக கட்சி இராணுவமயமாக்கப்பட்டது. இலங்கை இராணுவத்தின் தளபதியாகவிருந்த போர்குற்றச் சாட்டுகளுக்குள்ளான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவையும் தனது கட்சி வேட்பாளராக்கி அவரையும் பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்ததுடன் முன்னாள் இராணுவ, கடற்படைத் தளபதிகள் படு தீவிரமாக இணைக்கப்பட்டு அவர்களுக்கு கட்சியில் உயர் பதவிகளும் வழங்கப்பட்ட துடன் நாட்டில் அரசொன்றை அமைக்க இராணுவத்திலுள்ளவர்கள் தமது கட்சியில் இணைய வேண்டும் என்ற அழைப்பையும் எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இதுவரையில் முன்னாள் இராணுவத் தளபதி ஓய்வுபெற்ற ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க. இராணுவத்தின் முன்னாள் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க மற்றும் ஓய்வு பெற்றவர்களான மேஜர் ஜெனரல் சமன் லியனகே, மேஜர் ஜெனரல் அருண வன்னியாராச்சி, மேஜர் ஜெனரல் ஹேரத், மேஜர் ஜெனரல் அதுல கொடிப்புலி, மேஜர் ஜெனரல் பிரியந்த நாபானகொட, மேஜர் ஜெனரல் வசந்த ஜயசூரிய, மேஜர் ஜெனரல் எச்.எம்.எம்.பி ஹேரத், மேஜர் ஜெனரல் நிஷங்க ரணவன, மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து மேஜர் ஜெனரல் உபுல் விதானகே, மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகே, பிரிகேடியர் மஞ்சுள விஜேசிங்க ஆகிய இராணுவத்தின் முன்னாள் தளபதிகள் இணைந்துள்ளனர். இனவாதம் மதவாதம் அற்ற ஒரு கட்சியில் எப்படி இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதிகள், போர்குற்றச்சாட்டுகளுக்குள் ளானவர்கள் இணைவார்கள்?

**(தொடர்ச்சி 17 பக்கம்)**

ELECT

# PIRAVENA

## SATHIYANANTHAM (B.Eng)

### COUNCILLOR CANDIDATE -SCARBOROUGH NORTH - WARD 23

ஒரே ஒரு தமிழ் வேட்பாளராக ஸ்கார்புரோ வடக்கு 23ம் வட்டார City Councillor க்கு தேர்தலில் போட்டியிடும் பிரவீணா சத்தியானந்தத்தை Councillor ஆகத் தேர்ந்தெடுப்போம்.

அக்டோபர் 26, திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 8 மணிக்கு இடையில் அவர்களுக்கு உங்கள் வாக்கை பதிவு செய்யுங்கள்!

**நான் City Councillor ஆக தெரிவு செய்யப்பட்டால்**
**எனது வட்டாரத்திற்கு நான் செய்ய உள்ள செயற்பாடுகள்**

வீட்டு வரியை குறைப்பதற்கு முயற்சி செய்வேன்.

பாதுகாப்பை அதிகரித்து திருட்டு சம்பவம், வன்முறை போன்றவற்றை இல்லாமல் செய்து பாதுகாப்பான பிரதேசமாக எமது பிரதேசத்தை மாற்றுவேன்.

சுத்தமான, பசுமையான சூழலை உருவாக்க பூங்காக்களை விரிவுபடுத்தவும், பொழுது போக்கு வசதிகளை மேம்படுத்தவும், சமூக நிலையங்களை விரித்தி செய்யவும் முயற்சி செய்வேன்.

போக்கு வரத்து நெரிசலை குறைத்தல், மேலும் வாகன நிறுத்துமிடங்களுக்கு நடைமுறைக்கு சாத்தியமான தீர்வு காணல்.

வீடுகள் நெருக்கமாக அமைந்துள்ள பகுதிகளில் வாகன வேகத்தை கட்டுப்படுத்த Speed Bumf அமைத்தல்.

இப்பொழுது முதியவர்களின் தொகை கூடிக்கொண்டு வருகிறது, ஆகவே அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு முயற்சி செய்வேன்,

மேலும் மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பதிலும், வியாபாரிகள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதிலும் நமது வட்டாரத்தை அனைவருக்கும் உகந்த இடமாக மாற்றுவதிலும் நான் உறுதியாக செயற்பட தேர்தல் தினத்தன்று வாக்கு பலம் உள்ளவர்கள் உங்கள் வாக்கை செலுத்துவதன் மூலம் எங்களுடைய ஜனநாயக உரிமையை சரியான முறையில் நாங்கள் நிறைவேற்ற வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன

## What I will do:

*Safer Communities –*
*Work with city departments on community safety and violence.*

*Property Taxes –*
*Advocate for affordable property taxes and responsible spending to ease the financial burden on residents.*

*Parks and Recreation –*
*Improve parks, playgrounds, community centers and recreational programs.*

*Helping Seniors –*
*Support seniors' programs, accessible services and community activities.*

*Listening to Residents –*
*Respond to residents' concerns and bring their issues to City Hall.*



உங்கள் ஆதரவு எங்கள் வெற்றி

| 107 | Piravena Sathiyanantham | ● |
|---|---|---|

**ELECTION DAY: 2026 OCT 26**
10.00AM - 8.00PM

Together for a Better Scarborough!

www.piravena.ca
electpiravena@gmail.com

Need a ride to Vote? Lawn sign? Call me
647-354-0618 / 437-324-0618 / 437-428-0618



கனடிய செய்திகள்
Canadian News

# "செம்மணி" எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்ள, நாம் 30 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று, அந்த கொலைக்குழிகளோடு தொடர்புடைய கதைகளை அறிய வேண்டும்

## ஒட்டாவாவில் "செம்மணி" கொலைக்குழிகளுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் நினைவு நிகழ்வில் பிரதான உரையாற்றிய இங்கிலாந்தின் லண்டன் பல்கலைக் கழக கலாநிதிப் பட்டதாரி மரியோ அருள்தாஸ் விபரிப்பு!

ஒட்டாவா பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற "செம்மணி" கொலைக்குழிகளுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் நினைவு நிகழ்வில் பிரதான உரையாற்றிய இங்கிலாந்தின் லண்டன் பல்கலைக் கழக School of Oriental and African Studies பிரிவில் கலாநிதிப் பட்டம் பெற்றவருமான கலாநிதி மரியோ அருள்தாஸ் மேற்கண்டவாறு தனது உரையில் தெரிவித்தார்.

---------------------------------

ஈழத் தமிழர் விவகாரத்தில், வேறு எந்த நாடும் எடுக்காத சில நடவடிக்கைகளை கனடா எடுத்துள்ளது. கனடா இந்தச் செயல்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நீதிக்கான போராட்டம் நீண்டது: நாம் எதிர்பார்க்கும் இறுதி முடிவு உடனடியாகக் கிடைக்காமல் போகலாம். ஆனால், இத்தகைய செயல்முறைகளில் பங்கேற்பது என்பது, அதன் முடிவைப் போலவே மிக முக்கியமானதாகும். உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் உரிமைகளுக்காக உறுதியாகக் குரல் கொடுக்கும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடன், கனடியத் தமிழர்கள் தோளோடு தோள் நின்று துணை நிற்கிறார்கள். தங்களின் அரசாங்கமும் தங்களுக்குத் துணையாக நிற்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

---------------------------------

20ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று எமது பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரி ஆனந்தசங்கரி மற்றும் யுனிற்றா நாதன் ஆகியோரின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பெற்றிருந்த மேற்படி கூட்டத்தில் ரொறன்ரோ-மொன்றியால் மற்றும் ஒட்டாவா ஆகிய இடங்களிலிருந்து தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஊடகவியலாளர்களும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் கனடா உதயன் பிரதம ஆசிரியரும் தனது குழுவுடன் அதில் கலந்து கொண்டார்.

ஆரம்ப உரையை பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி அவர்களும் நன்றியுரையை பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்களும் ஆற்றினர்.

அங்கு உரையாற்றிய கலாநிதி மரியோ அருள்தாஸ் தனது உரையில் பின்வருமாறு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார், செம்மணி நிலப்பரப்பு எமக்கு எந்தவகையில் முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்ள, நாம் 30 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்று, அந்தப் படுகொலைக்குழிகளோடு தொடர்புடையவர்களின் கதைகளை அறிய வேண்டும்.

1995-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தைத் தனது கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தது. அவர்கள் அங்கு முகாம்கள், காவல் சாவடிகள் மற்றும் படைத்தளங்களின் ஒரு நெருக்கமான வலைப்பின்னலை உருவாக்கினர் இதன் மூலம் யாழ்ப்பாணத்தை உலகின் அதிக இராணுவமயமாக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக மாற்றினர். இப்பகுதி முழுவதும் முக்கியமான இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டன. இவை விடுதலைப் புலிகளின் (LTTE) நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டவை என்று கூறப்பட்டாலும், உண்மையில் அங்கு நடந்த நிகழ்வுகள் தமிழர்களின் மனங்களில் ஆறாத வடுக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை எவரும் மறைக்க முடியாது.











இதேவேளை, மூன்று தசாப்தங்களாக நீடித்து வரும், அதே சமயம் மிகுந்த முக்கியத்துவமும் அவசரத் தேவையும் கொண்ட சில உண்மைகளை பற்றிய உரையாடவும் சிந்திக்கவும் நாம் இன்று இங்கே கூடியுள்ளோம். அவை: செம்மணிப் படுகொலைக்குழிகளின் வரலாறு, இலங்கையில் தொடர்ந்து நிலவும் கட்டமைப்பு ரீதியான தண்டனையற்ற சூழல் (structural impunity), மற்றும் நீதிக்கான இந்த முன்னெடுப்பு கனடிய அரசாங்கத்தைப் பொறுத்தவரை எத்தகைய பொருளைக் கொண்டுள்ளது என்ற அடிப்படை வினா. ஆகியவை அடங்கும்.

ஈழத் தமிழ்ச் சமூகத்திற்கு வெளியே உள்ள பலருக்கு, "செம்மணி" என்பது எங்கோ தொலைவில் உள்ள ஒரு இடமாகத் தோன்றலாம். ஆனால், உலகம் முழுவதும் வாழும் லட்சக்கணக்கான தமிழர்களுக்கும், கனடாவைத் தங்கள் இல்லமாகக் கருதும் பல லட்சம் தமிழ்-கனடியர்களுக்கும், செம்மணி என்பது ஏதோ ஒரு தொலைதூர நாட்டில் உள்ள வரைபடத்தில் காணப்படும் இடத்திற்கு அப்பாற்பட்டது.









இது இனப்படுகொலையின் குறியீடாகவும், அரச வன்முறையின் இன்னும் தீர்வு காணப்படாத ஒரு களமாகவும் திகழ்கிறது. இலங்கையில் தொடர்ந்து நீடிக்கும் தண்டனையற்ற சூழலுக்கு இது ஒரு சான்றாகும்.

இங்கே நாம் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட வேண்டும்: படுகொலைக்குழிகள் என்பவை போரின் தற்செயலான எச்சங்கள் அல்ல் அவை அரசின் திட்டமிட்ட நோக்கத்தின் வெளிப்பாடுகள். மனித உயிர்களை அழித்து, உண்மையை மண்ணுக்கு அடியில் புதைப்பதற்கான ஒரு பௌதிக முயற்சியையே இவை குறிக்கின்றன.

இலங்கை அரசால் கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர், பல தசாப்தங்களாக நீதிக்காக மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக, இந்த உண்மையை மீண்டும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரவே நாம் இன்று இங்கே கூடியுள்ளோம். அதை ஒரு தொடர் முயற்சியாக நாம் சோர்வின்றி மேற்கொள்ள வேண்டும்.

18 வயதான கிரிஷாந்தி குமாரசுவாமி, என்னும் கல்லூரி மாணவி 1996-ஆம் ஆண்டு செப்டம்பர் 7-ஆம் தேதி, அவர் ஒரு தேர்வை முடித்துவிட்டு, இறந்த தனது நண்பர் ஒருவரின் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். துரதிர்ஷ்டவசமாக, அவரது அந்த நண்பர் ஒரு இராணுவ வாகனத்தால் மோதப்பட்டிருந்தார். செம்மணியில் இருந்த இராணுவச் சோதனைச் சாவடியைக் கடக்க முயன்றபோது, அவள் இராணுவத்தால் தடுத்து நிறுத்தப்பட்டாள். அவள் விசாரிக்கப்படுவதை ஒரு பக்கத்து வீட்டுக்காரர் பார்த்தார். அதன்பிறகு அவள் உயிருடன் இருந்த நிலையில் எவராலும் பார்க்கப்படவில்லை.

கிரிஷாந்தி வீட்டிற்குத் திரும்பாததால் கவலையடைந்த அவளது தாயாரிடம், அந்தப் பக்கத்து வீட்டுக்காரர் நடந்ததைக் கூறினார். கிரிஷாந்தியின் தாயார், தனது 16 வயது மகன் மற்றும் ஒரு பக்கத்து வீட்டுக்காரருடன் அந்தச் சோதனைச் சாவடிக்குச் சென்றார். அவர்களும் அதன் பிறகு மீண்டும் காணப்படவில்லை.

அந்த ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கணக்கானோர் காணாமல் போயினர். அந்த ஆண்டில் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும், தேடுதல் நடவடிக்கையின் போது இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்ட 39 தமிழ் ஆண்கள், அதன் பிறகு மீண்டும் ஒருபோதும் காணப்படவில்லை என்று "அம்னஸ்டி இன்டர்நேஷனல்" (Amnesty International) அமைப்பு தெரிவித்தது.

அந்த ஆண்டில் மட்டும் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்களின் மொத்த எண்ணிக்கை 700-க்கும் அதிகம் என்று கருதப்படுகிறது. ஒப்பீட்டளவில் சிறிய பரப்பளவு கொண்ட ஒரு பகுதியில், இவ்வளவு அதிகமான எண்ணிக்கையிலான மக்கள் காணாமல் போனது என்பது மிகப்பெரிய அதிர்ச்சியளிக்கும் நிகழ்வாகும். எப்படியோ, நூற்றுக்கணக்கான பிற சம்பவங்களைப் போலன்றி, கிரிஷாந்தியின் வழக்கு இந்த பயங்கரமான சூழலைத் தாண்டிப் பரவலான கவனத்தைப் பெற்றது. சிங்களவர்கள் அதிகம் வாழும் தென்பகுதியிலும் பெண்கள் அமைப்புகள் இதற்கு எதிராகப் போராடின. சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் அரசுக்கு அழுத்தம் கொடுத்தன.

இதனைத் தொடர்ந்து, முன்னெப்போதும் இல்லாத வகையில், கிரிஷாந்தியும் அவளது குடும்பத்தினரும் காணாமல் போன சிறிது காலத்திலேயே, அரசு நடவடிக்கை எடுத்து சில இராணுவ வீரர்களையும் காவல்துறையினரையும் கைது செய்தது. கைது செய்யப்பட்டவர்கள், புலனாய்வாளர்களைச் செம்மணிக்கு அழைத்துச் சென்றனர் அது கிரிஷாந்தி தடுத்து நிறுத்தப்பட்ட அந்தச் சோதனைச் சாவடிக்கு மிக அருகிலேயே இருந்தது. அங்கே, மேலோட்டமாகத் தோண்டப்பட்ட குழிகளில் புதைக்கப்பட்ட நிலையில் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

வழக்கு விசாரணையின் போதுதான், கிரிஷாந்திக்கும் அவளது குடும்பத்தினருக்கும் இழைக்கப்பட்ட கொடூரங்கள் வெளிச்சத்திற்கு வந்தன. ஒரு இராணுவ சிப்பாய், கிரிஷாந்தி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டது குறித்து வாக்குமூலம் அளித்தார். இலங்கை அரசு அதிகாரிகள் உட்பட 11 பேர் இதில் ஈடுபட்டிருந்தனர் என்று அவர் பகிரங்க நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார். மேலும், இராணுவ உத்தரவின் பேரில் நூற்றுக்கணக்கான தமிழ் பொதுமக்கள் சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டு, செம்மணியில் இருந்த பொதுக் குழிகளில் புதைக்கப்பட்டனர் என்றும் அவர் கூறினார். அவர் சில தளபதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டதுடன், மக்கள் புதைக்கப்பட்ட இடங்களையும் அடையாளம் காட்டினார்.

கிரிஷாந்தியைப் பாலியல் வன்புணர்வு செய்த குற்றத்திற்காகவும், கொலை செய்த குற்றத்திற்காகவும் மொத்தம் எட்டு இராணுவ வீரர்களும் ஒரு காவல்துறை அதிகாரியும் தண்டிக்கப்பட்டனர். ஆனால், இந்தத் தீர்ப்பை இலங்கை அரசு நீதியை நிலைநாட்ட வல்லது என்பதற்கான சான்றாகக் கருத முடியாது. மாறாக, இது இலங்கை அரசால் நீதியை வழங்க முடியாது என்பதற்கான ஆதாரமே ஆகும். அதற்கான காரணத்தை நான் உங்களுக்குச் சொல்கிறேன். இராணுவத்தினரின் சாட்சியங்களின் அடிப்படையில், 1999-ஆம் ஆண்டு செம்மணியில் அகழ்வாராய்ச்சி பணிகள் தொடங்கப்பட்டன. அங்கு கண்டெடுக்கப்பட்ட 15 உடல்கள், சித்திரவதை மற்றும் படுகொலை செய்யப்பட்டதற்கான கொடூரமான ஆதாரங்களை வெளிப்படுத்தின. இருப்பினும், ஆதாரங்கள் பெருகத் தொடங்கியதும், இலங்கை அரசு பின்வாங்கியது. டிஎன்ஏ (னுயேு) பகுப்பாய்வு "மிகவும் செலவு மிக்கது" என்று கூறி நிராகரிக்கப்பட்டது சர்வதேச தடயவியல் நிபுணர்களின் உதவியும் மறுக்கப்பட்டது. மேலும், பெயரிடப்பட்ட பிற இராணுவத்தினர் "உயர்மட்ட தளபதிகள் உட்பட" எவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

அதன்பிறகு வந்த ஆண்டுகளில், இந்த வழக்கு மெல்ல மெல்ல முடக்கப்பட்டது் எவ்வித மேல் நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை, வழக்கில் பெயரிடப்பட்ட சில தளபதிகளுக்குப் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன.





(தொடர்ச்சி 18 பக்கம்)

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# தற்போதைய "அசுர" நடவடிக்கைகள் சில மக்களை வியப்பில் ஆழத்தும் ஆச்சரியம்!

## திருகோணமலையில் 200ம் ஆண்டு இரு தமிழ்ப் பெண்களை கடத்தி கொலை செய்த சம்பவத்தில் இதுவரை 9 கடற்படையினர் கைது செய்து விளக்கமறியல்

திருகோணமலை, பாலையூற்று பகுதியில் வைத்து கடந்த 2008ஆம் இரண்டு பெண்களை வெள்ளை வேனில் கடத்தி சென்று, திருகோணமலை கடற்படை முகாமின் கன்சைட் என அழைக்கப்படும் நிலத்தடி இரகசிய அறையில் சிறையில் அடைத்து சித்திரவதை செய்து படுகொலை செய்த சம்பவம் தொடர்பில், கொழும்பில் வைத்து கடந்த 19ம் திகதி திங்கட்கிழமை சிஜடி-யினரால் கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரிகள் 3 பேரையும் எதிர்வரும் 28ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.எம்.சம்சுடீன், 20ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது விசாரணைகள் மிகவும் வேகமாக நடைபெறும் என்றும் உறுதியளித்தார்.

கடந்த 2008ஆம் ஆண்டு மே மாதத்தில், மேரி டெல்ஷியா மற்றும் சசி-குமார் தேன்மொழி ஆகிய இரண்டு தமிழ் பெண்களை வெள்ளை வானில் கடத்தி திருகோணமலை கடற்படை முகாமின் கன்சைட் என அழைக்கப்படும் நிலத்தடி இரகசிய அறையில் சிறையில் அடைத்து சித்திரவதை செய்து படுகொலை செய்த சம்பவம் தொடர்பாக சிஜடி-யினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த விசாரணையின் அடிப்படையில் இந்த மாதம் 5ம் திகதி கே.எச். கீத்திக்கா சந்தமாலி. எம்.அருணி தினிசா. ஆகிய இரு பெண் கடற்படையினரை சிஜடியினர் கைது செய்து திருகோணமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்ததைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதனை தொடர்ந்து கடற்படையினரான ஞானசேகரம் றொபட், பி..எச். சந்திரசிறி எம்.வீ.கே.சமிந்த குமார. பீ.டபிள்யூ.எஸ்.ஞானக்குமார. ஆகிய 4 பேரை கைது செய்து அவர்களும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மேற்படி கடத்தி கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களான மாத்தளை, பூஸ்ஸ மற்றும் பதுளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த, ஓய்வு பெற்ற கடற்படையின் நிர்வாகப் பிரதான கீழ்நிலை அதிகாரிகளான. எம்.எச்.அருண துசார மெண்டிஸ். கே.சீ.சுரேக டி சில்வா, ஆர்.எம். யூ.குமார ரத்நாயக்க. ஆகிய 3 பேரையும் 19ம் திகதி திங்கட்கிழமை சிஜடி-யினர் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 3 பேரையும் 20ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.எம். சம்சுடீன், முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் நவம்பர் 20 ம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.



இந்த கடத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை 2 பெண் கடற் படையினர் உட்பட 9 கடற்படையினரை சிஜடியினர் கைது செய்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிஜடியினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மக்கள் மத்தியில் இந்தக் கைதுகள் மிகுந்த ஆச்சரியத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

*(14 பக்கத் தொடர்ச்சி)*

## *திருந்தாத சஜித்தும் வருந்தாத பங்காளிகளும்!*

இவர்கள் மட்டுமன்றி இலங்கை கடற்படையின் 14 ஆவது கடற்படைத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற அட்மிரல் தயா சந்தகிரி, முன்னாள் சிறப்பு அதிரடிப்படை தளபதியான ஓய்வு பெற்ற நிமல் லெவ்கே, ஆகியோரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளதுடன் இவர்கள் அனைவருக்கும்கட்சியில் பல்வேறு பதவி நிலைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் இராணுவத்தில் தனக்கு எதிராக செயற்பட்டவர்களும் கட்சியில் உள்வாங்கப்பட்டு உயர் பதவிகள் வழங்கப்பட்டதால் அதிருப்தியடைந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கட்சித்தலைவரான சஜித் பிரேமதாசாவுடன் முரண்பட்டதால் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

மலையக தமிழ், முஸ்லிம் கட்சிகளை பங்காளிகளாக வைத்துக்கொண்டு ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலில் தனதும் தனது கட்சியின் வெற்றிக்காகவும் தமிழரசுக்கட்சியை பயன்படுத்தி வடக்கு, கிழக்கு தமிழ்மக்களின் வாக்குகளையும் மலையகத்தமிழ் தலைவர்களையும் கட்சிகளையும் பயன்படுத்தி மலையக தமிழ், மக்களின் வாக்குகளையும் முஸ்லிம் தலைவர்களையும் கட்சிகளையும் பயன்படுத்தி முஸ்லிம்களின் வாக்குகளையும் பெற்றுக் கொண்டு தென்னிலங்கை வாக்குகளை கவர்வதற்காக கட்சியையும் இராணுவ மயப்படுத்தி தனது ஆட்சியில் இராணுவத்திற்கே முன்னுரிமையென அறிவித்துக்கொண்டு இரட்டை வேடம்போட்டு வந்த சஜித் பிரேமதாச தலைமையலான இந்தக்கட்சிதான் தற்போது புத்தர் சிலை, காவியுடை மூலம் மீண்டும் இனவாதம் கக்கத்தொடங்கியுள்ளது.

திருகோணமலை சம்புத்தி ஜயந்த விகாரைப் பகுதியில் 2025 ஆம் ஆண்டு சட்டவிரோத "ரெஸ்ரோரண்ட்" ஒன்றை அகற்றும் அரச அதிகாரிகளின் நடவடிக்கையை தடுக்க இரவோடிரவாக சட்டவிரோதமாக புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்ய முயன்ற பிக்குகளினால் அப்பகுதியில் ஏற்பட்ட களேபரமும் அதன் தொடர்ச்சியாக அதனை சிங்கள-தமிழ் இன முறுகலாக, கலவரமாக மாற்றி அநுர குமார அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட விருந்த சதியும் தவிர்க்கப்பட்டபோதும் இந்த சம்பவத்தில், இதுவரை காலமும் ஜனநாயகம், சமத்துவம், சமஉரிமை இனநல்லுறவு, மதப் புரிந்துணர்வு என்ற முகமூடிகளுடன் இருந்த பிரதான எதிர்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினதும் முகமூடிகளை கிழித்து சஜித் பிரேமதாச ஒரு கடும் இனவாதி, அவரது கட்சியின் கொள்கையும் இனவாதம்தான் என்பதனை புத்த பெருமான் தமிழ் மக்களுக்கும் சஜித் பிரேமதாசாவை மீட்பராக வணங்கும் இலங்கை தமிழரசுக்கட்சிக்கும் புரிய வைத்தார்.

"பௌத்த பிக்குகள் பௌத்த மதம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதையோ அல்லது உரிமைகளைப் பயன்படுத்துவதையோ எவரும் தடுக்க முடியாது. அரசியலமைப்பின் 9ஆவது சரத்தின்படி இலங்கையில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நாட்டின் எந்த மூலையிலும் விகாரைகள் அமைப்பதையோ அல்லது புத்தர் சிலைகள் வைப்பதையோ எதிர்ப்பது பௌத்த மதத்திற்கு எதிரான செயல் என்று இந்த விடயத்தில் சஜித் பிரேமதாச கொதித்தெழுந்தார். சஜித் பிரேமதாச ஒன்றும் இனவாதம் துறந்த உத்தமர் அல்ல. 2019ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்ட அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு, கிழக்கு உட்பட, நாடு முழுவதும் 1000 விகாரைகள் கட்டுவேன் என சிங்கள மக்களுக்கு உறுதியளித்திருந்தார். 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலின் போதும் அந்த உறுதிமொழியை மீண்டும் வழங்கியிருந்தார். இவ்வா றான நிலையில்தான் தமிழர் நிலத்தில் சட்டவிரோத ஆக்கிரமிப்புகள், புத்தர் சிலை வைத்தல், பௌத்த விகாரைகள் அமைத்தல் மற்றும் தமிழ் மக்களின் நில உரிமைப் பிரச்சினைகளின் போது, சஜித் பிரேமதாச சட்டத்தின் ஆட்சியையோ அல்லது சிறுபான்மையினரின் உணர்வுகளையோ பொருட்படுத்தாமல் பௌத்த பிக்குகளின் பக்கமே, இனவாதத்தின் மொத்த உருவமாக நின்றார்.

இவ்வாறான நிலையில்தான் கடும் இனவாதியும் மதவாதியுமான ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அவரின் காவி உடை களையப்பட்டு சிறை ஆடை வழங்கப்பட்டமைக்கு எதிராக பிக்குகளுடன் இணைந்து சஜித் பிரேமதாசாவும் அவரது கட்சியினரும் வீதிக்கு இறங்கியுள்ளதுடன் இனவாதத்தையும் மதவாதத்தையும் மீண்டும் கையில் எடுத்துள்ளனர். ஞானசார தேரர் சிறைவாசம் மற்றும் தண்டனைகளை எதிர்கொண்ட சூழலில், சஜித் பிரேமதாசவும் அவரது கட்சியினரும் கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தனர்.

அப்போது பௌத்த பிக்குகள் கைது செய்யப்படுவதையும் சிறையில் அடைக்கப்படுவதையும் தடுக்க வேண்டும் என்றும், ஞானசார தேரருக்குப் பதிலாகத் தான் சிறை செல்லவும் தயார்" என்றும் பௌத்த கலாசாரத்தையும் சாசனத்தையும் பாதுகாக்கப் போவதாகவும் சஜித் பிரேமதாசா கூறினார். அத்துடன் தற்போதைய அரசு பௌத்த பிக்குகளைக் இலக்கு வைத்து நடவடிக்கை எடுப்பதாகவும், தற்போதைய அரசாங்கம் சிறுபான்மை சமூகங்களின் (தமிழ் மற்றும் முஸ்லிம்) ஆதரவைப் பெற அல்லது அவர்களை திருப்திப்படுத்த இவ்வாறான கைதுகளை மேற்கொள்வதாகவும் இதனால் பௌத்த சாசனத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினர்.

சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் தீவிர இனவாத வெறுப்புப் பேச்சுகளைப் பேசிய ஞானசார தேரர் என்ற ஒருவருக்கு ஆதரவாகச் சஜித் பிரேமதாச குரல் கொடுத்தது, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் மிகுந்த அதிருப்தியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இனவாதமற்றவர்களாக நடித்துக்கொண்டு மலையக தமிழ், முஸ்லிம் கட்சிகளை பங்காளிகளாக வைத்துக்கொண்டு. ஒவ்வொரு தேர்தலிலும் இவர்களை பயன்படுத்தி தமிழ், முஸ்லிம் வாக்குகளையும் பெற்றுக்கொண்டு வந்த சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி செய்வதோ அப்பட்டமான இனவாத,மதவாத அரசியல்.

ஒவ்வொரு தேர்தலிலும் "இனவாதமற்ற மாற்று சக்தி" என்ற போர்வையோடு மேடையேறும் சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, சிறுபான்மை மக்களின் நம்பிக்கையைத் தன் அரசியல் சதுரங்கத்தில் காய்களாகப் பயன்படுத்தி வருகிறது. மலையகத் தமிழ் மக்களின் தலைமைகளையும், முஸ்லிம் சமூகத்தின் தலைமைகளையும் தங்களின் தேர்தல் பங்காளிகளாகச் சேர்த்துக் கொள்வதும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஆதரவைச் சாமர்த்தியமாகப் பெற்று சிறுபான்மையினரின் வாக்குகளை அறுவடை செய்வதும் இவர்களின் வழக்கமான தேர்தல் உத்தியாகவே இருந்து வருகிறது. ஆனால், சிறுபான்மையினரின் தோள்களில் கைபோட்டுக்கொண்டு, உள்ளுக்குள் அப்பட்டமான பேரினவாத மற்றும் மதவாத அரசியலை முன்னெடுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி இரட்டை வேடம் போட்டு வருகின்றமை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அப்பட்டமான மதவாத, இனவாத அரசியலை இனியும் உணராமல் இருப்பது தமிழ், முஸ்லிம் சமூகங்களின் எதிர்காலத்திற்கே ஆபத்தானது.

*(16 பக்கத் தொடர்ச்சி)*

கடந்த ஆண்டு, அந்த இடத்தில் தற்செயலாக மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளின் போது, இந்தப் பொதுக்குழி மீண்டும் செய்திகளில் இடம்பிடித்தது. கிருஷ்சாந்தி கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு அருகிலேயே, தொழிலாளர்கள் மேலும் பல எலும்புக்கூடுகளைக் கண்டெடுத்தனர். கடந்த ஒன்றரை ஆண்டுகளில், கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை அதிர்ச்சியூட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

ஆகஸ்ட் மாதம் நிறைவடைந்த அகழ்வாராய்ச்சியின் சமீபத்திய கட்டத்தின் முடிவில், எலும்பு எச்சங்கள்... அடுத்தடுத்த மாதங்களிலும் அகழ்வாராய்ச்சி பணிகள் தொடரும். இருப்பினும், செம்மணியில் கண்டெடுக்கப்பட்டவை தொடர்பான விளைவு-களைக் கையாள்வதற்குத் தேவையான நிபுணத்துவமோ அல்லது அரசியல் விருப்பமோ இலங்கை அரசிடம் இல்லை. காணாமல் போனவர்களின் குடும்பத்தினரைக் கண்டறியவும், மூன்று தசாப்தங்களாகத் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியக் காத்திருக்கும் அவர்களுக்கு உண்மையை உணர்த்தவும் டிஎன்ஏ (DNA) பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், இதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆனால், இலங்கை அரசின் வரலாற்றில், தங்களுக்குள்ளேயே நிலவும் இந்தத் தண்டனையற்ற சூழலுக்கு (impunity) எதிராக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. இலங்கை அரசு இயந்திரமானது, தனது எல்லைக்குள் ஒடுக்கப்பட்ட ஒரு இனத்திற்கு எதிராகத் தனது இராணுவத்தினர் இழைத்த குற்றங்களை விசாரிக்கும் திறன் கொண்டதாகக் கட்டமைக்கப்படவில்லை. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும், படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் எலும்புகள் மண்ணிலிருந்து கண்டெடுக்கப்படுகின்றன என்றால், அது இன்னும் தீர்க்கப்படாத, தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு குற்றச் செயலின் களமாகவே உள்ளது.

காணாமல் போதல்களுக்கு வழிவகுத்த சட்டக் கட்டமைப்புகள் இன்றும் நீடிக்கும் நிலையில், செம்மணியை ஏதோ கடந்த காலத்தின் ஒரு எச்சம் என்று மட்டும் நாம் கூறிவிட முடியாது. நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக, "பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்" (PTA) எனும் கொடூரமான சட்டம், தன்னிச்சையான கைதுகள், விசாரணையின்றி நீண்ட காலம் சிறைவைத்தல், திட்டமிட்ட சித்திரவதைகள், மற்றும் சிறை வைக்கப்பட்டவர்களைக் காணாமல் போகச் செய்தல் அல்லது படுகொலை செய்தல் போன்ற செயல்களுக்கு ஒரு சட்டப்பூர்வ அடித்தளத்தை வழங்கியது. சர்வதேச அழுத்தத்தின் காரணமாக, இந்தச் சட்டத்தை நீக்குவதாக இலங்கை அரசு உறுதியளித்தது. தற்போது, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவரும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால், இது முந்தைய சட்டத்தை விடவும் மோசமானது என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர். இது எங்களது "தி நார்த்-ஈஸ்டர்ன்" (The North-Eastern) இதழையும் பாதித்துள்ளது. வரவிருக்கும் இதழில் செம்மணி குறித்த விரிவான கட்டுரை ஒன்றை நாங்கள் தயார் செய்திருந்தோம். ஆனால், புதிய சட்டங்கள் மற்றும் தீவில் உள்ள எனது சக பணியாளர்களின் கவலைகள் காரணமாக, கவிதைகள் மற்றும் கலைப்படைப்புகள் உட்பட வேறு சில ஆக்கங்களை இதழிலிருந்து நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஒரு அரசு, முறையான அரசியல் வெளிப்பாடுகளைக் குற்றமாக்கும் சட்டங்களை மீண்டும் மீண்டும் இயற்றி, தனது பாதுகாப்புப் படைகளை எவ்விதக் கண்காணிப்புக்கும் உட்படாமல் பாதுகாக்கும்போது, அது உலகிற்கு ஒரு தெளிவான செய்தியை உணர்த்துகிறது: செம்மணியில் புதைகுழிகளை உருவாக்கிய அதே இயந்திரம் இன்றும் அப்படியே நீடிக்கிறது.

தொடரும் ஒடுக்குமுறையும், இத்தகைய கட்டமைக்கப்பட்ட தண்டனையற்ற சூழலும் நிலவுவதால்தான், கனடா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதாக உள்ளது. இன்று ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்: தமிழர்களுக்கான நீதி விவகாரத்தில், மிக முக்கியமான தருணங்களில் கனடா உண்மையான மற்றும் துணிச்சலான உலகளாவிய தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இதை அதன் வரலாற்றுப் பின்னணியுடன் நாம் பார்க்க வேண்டும். வரலாற்று ரீதியாக, தமிழர்களுக்கு எதிரான போரில் கனடா இலங்கை அரசுக்கு ஆதரவளித்தே வந்துள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை தொடர்ந்து நீடித்து வருவதால், கனடாவில் வாழும் தமிழர்கள் கடந்த 20 ஆண்டுகளாகத் தங்கள் அரச-ியல் கருத்துகளை வெளிப்படுத்துவதற்காகக் குற்றவாளிகளாகச் சித்தரிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த 20 ஆண்டுகளில், விடுதலைப் புலிகள் அமைப்பு செயல்பாட்டில் இருந்தது வெறும் மூன்று ஆண்டுகள் மட்டுமே; மீதமுள்ள 17 ஆண்டுகளாக அந்த அமைப்பு இயங்கவே இல்லை.

"தமிழ் பெண்ணியக் கூட்டமைப்பு" (Tamil Feminist Collective) வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கை ஒன்றில், 1980-களில் தமிழர்களுக்கு எதிராகத் தீவிரமான போர் நடைபெற்றபோது, கனடா இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்தது குறித்த தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இதுவும் கனடியத் தமிழர்கள் எதிர்கொள்ள வேண்டிய ஒரு கசப்பான உண்மையாகும்.

இருப்பினும், அந்த காலத்திலிருந்து கனடா நீண்ட தூரம் முன்னேறியுள்ளது. 2022-ஆம் ஆண்டில், மே 18-ஆம் தேதியை "தமிழ் இனப்படுகொலை நினைவு நாளாக" அங்கீகரிக்கும் தீர்மானத்தை கனடிய நாடாளுமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் நிறைவேற்றியதை நாம் பாராட்ட வேண்டும். இந்தத் தீர்மானம், பல அரசாங்கங்களும் சர்வதேச அமைப்புகளும் தொடர்ந்து மறைக்க முயலும் ஒரு வரலாற்று உண்மையை உரக்கச் சொன்னது.

மேலும், 2019-இல் அமெரிக்கா எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இலங்கை அரசின் முன்னாள் அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் மீது கனடா தடைகளை விதித்தது. இது ஒரு மிக முக்கியமான முன்னெடுப்பாகும். இந்த முடிவு கொழும்பில் உள்ள இராணுவ மற்றும் அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியதுடன், "இது இன்னும் முடிவுக்கு வரவில்லை" என்ற வலுவான செய்தியையும் உணர்த்தியது. இதனைத் தொடர்ந்து 2025-இல் ஐக்கிய இராச்சியமும் (UK) இதேபோன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. கனடா முன்னின்று செயல்படும்போது, சர்வதேசச் சூழலையே மாற்றியமைக்க முடியும் என்பதை இச்செயல்கள் காட்டின.

இருப்பினும், இலங்கை விவகாரத்தில் கனடாவின் ஒட்டுமொத்த வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள இந்தச் சரிவு, மிகவும் கவலைக்குரியதாக உள்ளது.

இதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம் அடையாள ரீதியான அங்கீகாரமும், குறிப்பிட்ட நபர்கள் மீதான தடைகளும் மிக முக்கியமான கருவிகளாகும். பிராம்ப்டனில் (Brampton) அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் போன்ற அமைப்புகள் மூலம், தமிழர்கள் இனப்படுகொலையை நினைவு கூர்வதற்கு கனடா அனுமதி அளிப்பது கூட ஒரு முக்கியமான விஷயம்தான். ஆனால், இத்தகைய நடவடிக்கைகளைத் தொடர்ந்து நீதிக்கான முன்னெடுப்புகள் கைவிடப்பட்டால், மேலும் இனப்படுகொலையில் ஈடுபட்ட ஒரு தரப்பை எவ்வாறு நடத்த வேண்டுமோ அவ்வாறு இலங்கை அரசை நடத்தத் தவறினால், இந்த நடவடிக்கைகள் பொறுப்புக்கூறலை அடைவதற்கான வழியாக அமையாமல், வெறும் வெற்று மாற்றீடாகவே மாறிவிடும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் டாவோஸில் கனடியப் பிரதமர் ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்களை நான் மீண்டும் இங்கே குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். கனடா, இந்த உலகளாவிய கொள்கை மாற்றத்தில் தான் உண்மையாகவே உறுதியாக இருப்பதைச் சில வழிகளில் வெளிப்படுத்தியுள்ளது.

சர்வதேச சட்டத்தை முன்னிறுத்துவது என்பது, உலகளாவிய தலைப்புச் செய்திகளில் இடம்பெறும் புவிசார் அரசியல் களங்களில் - அதாவது மேற்கத்திய நாடுகளின் நலன்கள் ஒன்றிணைந்து, அரசியல் ஒருமித்த கருத்து ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடங்களில் - இயல்பாகவே நிகழக்கூடிய ஒன்றுதான் ஆனால் அது அவ்வளவு எளிதான காரியமல்ல. கனடாவின் வெளியுறவுக் கொள்கை மாற்றத்திற்கான மற்றொரு முக்கியமான சோதனை, பெரும் வல்லரசுகளின் தலைநகரங்களில் மட்டும் நடப்பதில்லை. அரசியல் ரீதியாக "குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தவை" என்று அடிக்கடி புறக்கணிக்கப்படும் இடங்களிலும் இது நிகழ்கிறது. இலங்கை போன்ற நாடுகள் இதற்கு ஒரு உதாரணம்.

ஜெனிவாவில் உள்ள ஐநா மனித உரிமைகள் கவுன்சிலில் கனடாவின் செயல்பாட்டை எடுத்துக்கொள்வோம். ஒரு தசாப்தத்திற்கு முன்பு, இலங்கையில் நடந்த அட்டூழியங்கள் குறித்து சர்வதேச தலையீட்டையும், சுதந்திரமான சர்வதேச விசாரணைகளையும் கோரும் ஐநா மனித உரிமைகள் கவுன்சில் தீர்மானங்களுக்கு, கனடா முன்னின்று ஆதரவளித்ததை ஒரு பெருமையாகக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில், இலங்கையின் உள்நாட்டு நீதிமன்றங்களுக்குத் தங்கள் சொந்த இராணுவத்தினர் மீது வழக்குத் தொடரத் தேவையான சுதந்திரமோ அல்லது அரசியல் விருப்பமோ இல்லை என்பதை கனடிய இராஜதந்திரிகள் சரியாகவே உணர்ந்திருந்தனர்.

இருப்பினும், காலப்போக்கில் அரசியல் கணக்கீடுகள் மாறியதாலும், இராஜதந்திர ரீதியான சோர்வு ஏற்பட்டதாலும், கனடா அந்த கோரிக்கைகளிலிருந்து மெல்ல மெல்லப் பின்வாங்கியது. சுதந்திரமான சர்வதேச நீதி அமைப்புகளை வலியுறுத்துவதற்குப் பதிலாக, இலங்கையின் உள்நாட்டு நடைமுறைகளை-யே மீண்டும் நம்பியிருக்கும் வகையிலான, வீரியம் குறைந்த தீர்மானங்களுக்கு கனடா ஆதரவளிக்கத் தொடங்கியது. கனடிய நாடாளுமன்றமே "இனப்படுகொலை" என்று அங்கீகரித்த ஒரு செயலுக்குக் காரணமான அதே அரசு இயந்திரத்திற்கு, தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது மற்றும் அதன் உள்நாட்டுத் திறனை மேம்படுத்துவது குறித்து கனடா அமைதியாக விவாதிக்கத் தொடங்கியது. சர்வதேச விசாரணைகளைக் கோருவதிலிருந்து, இத்தகைய சமரசங்களுக்கு கனடா மாற-ியதை நாம் கண்டோம்.

இத்தகைய நடைமுறைகள், பொறுப்புக்கூறலை முற்றிலுமாகத் தவிர்க்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதில் கனடா மட்டுமல்ல, மனித உர-ிமை ஆர்வலர்கள் மற்றும் இது குறித்து ஆய்வு செய்யும் கல்வியாளர்கள் என அனைவரும் எவ்வித ஐயமுமின்றி உறுதியாக உள்ளனர். இது நமக்குத் தெரியும் இங்கே இருப்பவர்களில் யாருக்கும் இதில் மாற்று கருத்து இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

ஒருபுறம், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட முன்னாள் அரசு அதிகாரிக-ளின் மீது ஒட்டாவாவில் இருந்து தடைகளை விதித்துவிட்டு, மறுபுறம் ஜெனிவாவில் நீதியை அந்த குற்றவாளிகளின் கைகளிலேயே ஒப்படைக்கும் தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பது என்பது, பிரதமர் சரியாகவே விமர்சித்த அந்த "நடிப்பு" அல்லது "ஏமாற்று வேலை"யையே மீண்டும் காட்டுகிறது. இது உலகெங்கிலும் உள்ள சர்வாதிகார ஆட்சிகளுக்கு ஒரு செய்தியை அனுப்புகிறது: அதாவது, அவர்கள் பொ-றுமையாகக் காத்திருந்தால், சர்வதேச சட்டத்தின் மீதான உறுதிப்பாடு காலப்போக்கில் கரைந்து, இறுதியில் ஒரு அமைதியான சமரசமாக மாறிவிடும். கனடா தனது புதிய "நடுத்தர வல்லரசு" (middle-power) கொள்கை மாற்றத்தை உலகிற்கு உணர்த்த விரும்பினால் - அது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவு மட்டுமல்லாமல், அதற்கு அப்பாலும் செல்ல வேண்டும் என்றால் - இலங்கை போன்ற நாடுகள் அதற்கான மிகச்சிறந்த களமாக அமையும்.

இந்தச் சூழலில், "செம்மணி" விவகாரம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. ஈழத் தமிழர் விவகாரத்தில், கனடா இதுவரை வேறு எந்த நாடும் எடுக்காத சில முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சர்வதேச நீதி அமைப்பின் குறைபாடுகளை ஒரு அளவுகோலாகக் கொள்ள முடியாது. சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை உருவாக்குவது ஒரு சவால-ான காரியம் என்பது நமக்குத் தெரியும்.

சர்வதேச நீதி பொறிமுறை ஒன்று உருவாவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு என்று நீங்கள் கருதினாலும், இலங்கை தனது கடமையாகப் பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு அதைவிடப் பல மடங்கு குறைவுதான்.

கனடா தான் இதுவரை வெளிப்படுத்திய தலைமைத்துவத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் இலங்கை குறித்த தனது கொள்கையை மறுசீரமைக்க வேண்டும். கனடாவின் வசம் இன்னும் பல வழிமுறைகள் உள்ளன.

PEARL போன்ற சிவில் சமூக அமைப்புகளும், பாதிக்கப்பட்ட சமூகத்தினரும், கனடா வெறும் நிர்வாக ரீதியான நடவடிக்கைகளைத் தாண்டி, குற்றவியல் பொறுப்புக்கூறலை நோக்கி நகர வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். குறிப்பாக, "மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் சட்டத்தை" (Crimes Against Humanity and War Crimes Act) பயன்படுத்தி, "உலகளாவிய அதிகார வரம்பின்" (Universal Jurisdiction) ஊடாகக் குற்றவாளிகள் மீது விசார-ணை நடத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

செம்மணி விவகாரத்தைப் பொறுத்தவரை, சுதந்திரமான நெறிமுறைகளுடன் கூடிய சர்வதேச கண்காணிப்பு வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கையை கனடா ஆதரிக்க வேண்டும். பெருமளவில் புதைகுழிகள் கண்டறியப்பட்ட இடங்களில் பணியாற்றிய தனது சொந்த அனுபவத்தைப் பயன்படுத்தி, இதற்கான சர்வதேசக் கூட்டமைப்பொன்றை கனடா உருவாக்க முடியும்.

இறுதியாக, இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களுடனான ஈடுபாட்டை கனடா அனைத்துத் தளங்களிலும் அதிகரிக்க வேண்டும். கனடாவில் வாழும் தமிழர்களுடன் இணைந்து, ஒட்டாவாவிலிருந்து வட-கிழக்கு இலங்கைக்கு நேர-டியான, தனித்துவமான தொடர்பாடல் பாதைகளை உருவாக்க வேண்டும். வட-கிழக்கில் வளர்ந்து வரும் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளில் கனடியத் தமிழர்கள் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்க வேண்டுமானால், அதற்கான வாய்ப்புகள் "நீதி" குறித்த விவகாரங்களில் அவர்கள் மௌனம் காக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாக இருக்கக்கூடாது. கொழும்பு வழியாக இந்தத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டால், அத்தகைய நிபந்தனை விதிக்கப்படவே அதிக வாய்ப்புள்ளது. எனவே நாம் கவனமாகச் செயற்படுவது அவசியமாகும்" என்றார்.

***- UTHAYAN LJI Journalist Ganesh -***

# பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் 4 ஆவது அறிக்கை பச்சைப் பொய்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## செம்மணி மனிதப் புதைகுழி உண்மையை மறைப்பதாக நாடாளுமன்றத்தில் கோடீஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு



"செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சி தொடர்பில் தொல்லியல் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நான்காவது அறிக்கையில், முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாவது அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. இயற்கை அனர்த்தம் அல்லது தொற்றுநோய்களால் உயிரிழப்புகள் இடம்பெற்றிருக்கலாம் என்று குறிப்பிடுவதை முற்றாக நிராகரிக்கின்றோம். இந்த அறிக்கை உண்மைக்குப் புறம்பானது. செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் முதலில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டாலும், தற்போது உண்மையை மறைப்பதற்கும் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கும் போலியான அறிக்கைகள் ஊடாகச் சதி இடம்பெறுகின்றது. உண்மையை கண்டறிய வேண்டுமாயின் சர்வதேச நிபுணர்களைக் கொண்டு இந்த மனிதப் புதைகுழிகளை ஆய்வு செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றோம்."

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 22ம் திகதி அன்று வியாழக்கிழமை நடைபெற்ற நச்சு, அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், "செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்ட தமிழர்களின் உடல்கள் தொடர்பான நீதி விசாரணைகளை ஏதோவொரு விதத்தில் முடக்கும் செயற்பாடே தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளது. இதனாலேயே உள்நாட்டுப் பொறிமுறை அல்லது உள்நாட்டில் உள்ள நபர்களால் முன்னெடுக்கப்படும் ஆய்வுகள் திருப்திகரமான ஆய்வாக இருக்காது என்பதனை ஆரம்பத்தில் இருந்தே குறிப்பிட்டு வருகின்றோம்.

சர்வதேச விசாரணை, சர்வதேச நிபுணர்களைக் கொண்டு இந்த மனிதப் புதைகுழிகளை ஆய்வு செய்ய வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வு ஆராய்ச்சி தொடர்பான 2025.‵.2026ஆம் ஆண்டுக்கான இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தொல்லியல் ஆய்வாளர் ராஜ் சோமதேவவினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையானது உண்மையில் மாறுபட்டதாக உள்ளது.

உண்மைக்குப் புறம்பான சில விடயங்களை அந்த அறிக்கை வெளியிடுவதாக நாங்கள் பார்க்கின்றோம். ஆரம்பத்தில் இருந்த முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாவது அறிக்கைகளை ஆராயும்போது, அந்த அறிக்கையில் உள்ள விடயங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ள நான்காவது அறிக்கையில் திரிபுபடுத்தப்பட்டதாக அமைந்துள்ளது.

இதில் விசேடமாக உள்ள விடயம் என்னவென்றால், ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் அதில் உள்ள செயற்பாடுகள் தற்போது மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறு திட்டமிடப்பட்ட முறையில் இந்த ஆய்வாளரினால் மாற்றப்பட்டுள்ளது என்பதனையே குறிப்பிடுகின்றோம்.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின்படி, புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகள் இயற்கை அனர்த்தத்தினாலும் தொற்றுநோயாலும் இறந்திருக்கலாம் என்றே அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இதனை உண்மைக்குப் புறம்பான அறிக்கையாகவே நாங்கள் கருதுகிறோம்.

இந்த அறிக்கையைச் சமர்ப்பித்த ராஜ் சோமதேவா என்பவர் தொல்லியல் ஆய்வாளரே தவிர, அவர் மருத்துவ, தடயவியல் நிபுணரோ, மானுடவியல் தொடர்பானவரோ அல்லது உடற்கூற்றுப் பரிசோதனை பற்றிய அறிவைக் கொண்டவரோ அல்லர். அவர் தனது அறிக்கையில் தனது ஆராய்ச்சியை விடுத்து, தனக்கு விரும்பியவாறு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாவது அறிக்கைகளில் இந்த விடயங்கள், குறிப்பாகச் சாதாரண தடையத்துக்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றும், இது குற்றம் தொடர்பான விடயமாக இருப்பதால் அதனைச் குற்றவியல் பிரதேசமாகக் கருதியே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அவர் தனது நான்காவது அறிக்கையில் சாத்தியக்கூறு குறைவானதாகவே சுட்டிக்காட்ட விரும்புகின்றார்.

ஆரம்பத்தில் இதனைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டாலும், பின்னர் இதனை மறைப்பதற்காகச் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கான சூழ்ச்சி வேலையாகவே பார்க்கின்றோம். செம்மணிப் புதைகுழி இந்து மயானமாகவே இருந்துள்ளது.

அங்கு புதைக்கப்பட்ட உடல்கள் வித்தியாசமான முறையில் புதைக்கப்பட்டுள்ளன. அங்கிருந்த சோமரத்ன ராஜபக்ஷ இதனைத் தோண்ட வேண்டும் என்றும், இங்கு 600 இற்கும் மேற்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்றும் கூறியிருந்தார்.

அங்கு இதுவரை எடுக்கப்பட்ட உடல்களைப் பார்க்கும் போது 572 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், இப்போது வந்துள்ள அறிக்கையைப் பார்க்கும் போது, 1995 மற்றும் 1996ஆம் ஆண்டுகளில் புதைக்கப்பட்டவை அல்ல, 50 வருடங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்ட உடல்களாக இருக்கலாம் என்று ராஜ் சோமதேவாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எந்த வகையில் உண்மையாக இருக்க முடியும்?

எவ்வாறாயினும், அங்கு தோண்டப்படும்போது நாணயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த நாணயங்கள் 1995 மற்றும் 1996ஆம் ஆண்டு காலத்துக்குரியவையே. அதனை அந்த அறிக்கையில் அவர் குறிப்பிடவில்லை.

அதேபோன்று, அந்த உடல்கள் புதைக்கப்பட்ட விதம், ஆரம்பத்தில் புகைப்படங்களில் இருந்த விதம் மற்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மாறுபட்டவையாக இருக்கின்றன.

பல விடயங்களை மறைத்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டதாகவே இருக்கின்றது. அவர் ஆய்வாளரே தவிர மருத்துவ நிபுணரோ, மானுடவியல் விடயங்களைக் கையாளும் நிபுணரோ அல்லர். ஆனால் உடற்கூற்றுப் பரிசோதனையைச் செய்தது போன்றே அவர் அந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். இந்த அதிகாரத்தை இவருக்கு யார் கொடுத்தது?

ஏதோவொரு விதத்தில் அங்கு புதைகுழியில் புதைக்கப்பட்ட தமிழர்களின் உடல்கள் தொடர்பான நீதி விசாரணைகளை முடக்கும் செயற்பாடாகவே நாங்கள் இதைப் பார்க்கின்றோம். இதனாலேயே உள்நாட்டுப் பொறிமுறை அல்லது உள்நாட்டில் உள்ள நபர்களால் செய்யப்படும் ஆய்வுகள் திருப்திகரமான ஆய்வாக இருக்காது என்பதைக் கூறுகின்றோம்.

இதனாலேயே சர்வதேச விசாரணை, சர்வதேச நிபுணர்களைக் கொண்டு இந்தப் புதைகுழிகளைத் தோண்டி மனித எச்சங்களைப் பார்த்து ஆராயும்போது உண்மைகளைக் கொண்டுவர முடியும். இதனால் ராஜ் சோமதேவாவின் நான்காவது அறிக்கை முன்னுக்குப் பின் முரணானதாக இருக்கின்றது.

புதைக்கப்பட்ட உடல்கள் தோண்டியெடுக்கப்படும்போது சப்பாத்து அணிந்த சிறுவர்கள் இருந்துள்ளனர். வயோதிபர்கள், சிறிய குழந்தைகள் மற்றும் பாடசாலை மாணவர்களும் இருந்துள்ளனர். அவர்களின் சப்பாத்துகள், செருப்புகள் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றின் புகைப்படங்களும் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அறிக்கையில் அவற்றைக் காணவில்லை. பாடசாலைப் பை, அவர்களின் ஆடைகளும் இருந்தன. ஆனால், அறிக்கையைப் பார்க்கும் போது இது 40 மற்றும் 50 வருடங்களுக்கு முற்பட்ட உடல்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை வெளியிடுகின்றார். இதனால் இது முன்னுக்குப் பின் முரணான கருத்தாக இருக்கின்றது. இதனை ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுகின்ற செயற்பாடாகவே பார்க்கின்றோம்.

இந்த விடயத்தை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும். விசேடமாக, உள்நாட்டிலுள்ள நிபுணத்துவம் உள்ளவர்கள் மாத்திரமன்றிச் சர்வதேசத்திலுள்ள நிபுணத்துவம் மிக்கவர்களையும் உள்வாங்கி ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டும். 65 வீதமான இடங்களிலேயே உடல்கள் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்னும் 35 வீதமான இடங்கள் இருக்கின்றன. அவற்றில் 1200 இற்கும் மேற்பட்ட உடல்கள் இருக்கலாம் என்ற சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மரணதண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ என்பவர் 1995 மற்றும் 1996ஆம் காலப்பகுதியில் குறித்த பகுதியில் இராணுவச் சிப்பாயாக இருந்தவர் என்பதுடன், குறித்த சம்பவத்தை நேரடியாகக் கண்டவராவார். இவர் சாட்சியமளித்துள்ளார். இப்போது அவரை மீண்டும் குற்றப் புலனாய்வு விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சிப்பாய் இருந்தபோது நடந்த படுகொலையை அடிப்படையாகக் கொண்டு 600 இற்கும் மேற்பட்ட உடல்கள் அந்தப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். ஆனால், வெளியிடப்பட்ட அறிக்கையில் இயற்கை அனர்த்தம் அல்லது தொற்றுநோயினால் புதைக்கப்பட்டவர்களாக இருக்கலாம் என்ற ஊகம் எழும்புவதாகக் கூறப்பட்டுள்ளது. இது மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் செயற்பாடாகவே தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

ஆகவே, மிகுதியாக இருக்கும் 35 வீத இடங்களையும் பிரதேசங்களையும் ஆய்வு செய்ய வேண்டுமென்றால், அரசு சர்வதேச ஒத்துழைப்புடன் இதற்கான வேலைத்திட்டங்களைச் செய்ய வேண்டும். அரசுக்கு அந்தக் கடமையும் பொறுப்பும் உள்ளது.

பட்டலந்த படுகொலை தொடர்பான விடயங்களில் கடந்த கால அரச காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஆய்வு செய்யும் அதேநேரத்தில், செம்மணி தொடர்பான மிகுதி விடயங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். அதற்கான பொறுப்பும் கடமையும் அரசுக்கு உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாக இருக்கலாம் அல்லது சந்திரிகா, பிரேமதாஸ கால அரசுகளாக இருக்கலாம். இவர்களாலேயே இந்தப் படுகொலைகள் செய்யப்பட்டன. இதனால் இந்த விடயங்களின் அடிப்படையில் இந்த அரசுக்குப் பொறுப்புகள் உள்ளன. தமிழினப் படுகொலையை மறைப்பதற்கான ஒரு விடயமாக இது இருக்கலாம் என்ற சந்தேகங்கள் உள்ளன.

தொல்லியல் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவா வழங்கியுள்ள அறிக்கை கேள்விக்குரிய அறிக்கையாகவே இருக்கின்றது. முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாவது அறிக்கைகளில் மனிதப் புதைகுழி என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், நான்காவது அறிக்கையில் மனிதப் புதைகுழி என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டவில்லை.

ஆகவே, இந்த அறிக்கை திட்டமிடப்பட்ட செயலாகவும் சர்வதேசத்தை ஏமாற்றுகின்ற செயலாகவும் இருக்கும். எனவே, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் தகுந்த நீதியான விசாரணையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்."
- என்றார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணம் – இணுவில் சந்தியில் இடம் பெற்ற கோரவிபத்தில் டிப்பர் சாரதியால் கொல்லப்பட்ட குடும்பஸ்தர்!

22ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் இணுவில் சந்தியில் இடம்பெற்ற கோர விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார். இதன்போது வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கினை சேர்ந்த கணேசன் பழனிலிங்கம் (வயது 67) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் இன்று காலை பால் வாங்குவதற்காக துவிச்சக்கர வண்டியில் சென்றுள்ளார். பின்னர் இணுவில் சந்தி பகுதியில் துவிச்சக்கர வண்டியை உருட்டிக் கொண்டு சென்றவேளை, கந்தசுவாமி ஆலய பக்கத்தில் இருந்து வந்த டிப்பரானது மருதனார்மடம் பக்கம் திருப்ப முயன்றது.

இதன்போது குறித்த குடும்பஸ்தரின் மீது டிப்பர் ஏறியதில் விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# மன்னாரில் ஐக்கிய நாடுகள். உயிர்ப்பல்வகைமை மாநாட்டில் பங்கேற்கும் இலங்கை இளம் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர் அனுசன் சிவராசா! யானைச் சவாரி மற்றும் வன சுற்றுலா ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது



முல்லைத்தீவைச் சேர்ந்த இளம் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளரான அனுசன் சிவராசா, ஆர்மேனியாவின் யெரெவான் நகரில் ஒக்டோபர் 22 முதல் 29 வரை நடைபெறும் ஐக்கிய நாடுகள் உயிர்ப்பல்வகைமை ஒப்பந்தத்தின் 17ஆவது தரப்பினர் மாநாட்டில் (COP17) பங்கேற்கும் ஆங்கிலிக்கன் பிரதிநிதிக் குழுவில் இடம்பெற்றுள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உயிர்ப்பல்வகைமைப் பேணுகை, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான சமூகங்களின் மீள்திறனை வலுப்படுத்துதல் மற்றும் இளைஞர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய துறைகளில் அனுசன் தொடர்ந்து பங்களித்து வருகின்றார். தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் (NCCSL) அனர்த்த அபாயக் குறைப்பு மற்றும் காலநிலை மாற்றத் தழுவல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகவும், ஹலோ ட்ரஸ்ட் இலங்கையில் சுற்றுச்சூழல் ஆதரவு முகாமையாளராகவும் அவர் பணியாற்றி வருகின்றார்.

கண்டல் சூழலமைப்புகளைப் பாதுகாத்தல், காடுகள், ஈரநிலங்கள் மற்றும் ஆறுகளைப் பேணுதல், வீட்டுத் தோட்டங்களை ஊக்குவித்தல், சமூக அடிப்படையிலான சுற்றுச்சூழல் முயற்சிகள் மற்றும் இளைஞர்களுக்கான சுற்றுச்சூழல் கல்வி போன்ற பல்வேறு செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டு வருகின்றார். வடக்கு மாகாணம் உட்பட இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும் சமூகங்களின் பங்கேற்பை வலுப்படுத்துவதற்கும் பங்களித்து வருகின்றார். தேசிய அளவிலான சுற்றுச்சூழல் வினாடி வினாப் போட்டிகள் உடாகவும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்தி வருகின்றார்.

காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் தொடர்பான முதுமாணிப் படிப்பைத் தொடர்ந்துவரும் அனுசன், சுற்றாடல் ஆய்வுகளையும் சமூகங்களின் அனுபவங்களையும் இணைத்து நீண்டகால சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார்.

COP17 மாநாடு குறித்த தனது எதிர்பார்ப்பைப் பகிர்ந்துகொண்ட அனுசன் சிவராசா தெரிவிக்கையில்: "COP17 மாநாடு என்பது உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பிற்கான உலகளாவிய நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும், சர்வதேச உறுதிமொழிகளை சமூக மட்டத்தில் அர்த்தமுள்ள செயற்பாடுகளாக மாறுவதை உறுதிப்படுத்துவதற்குமான முக்கியமான வாய்ப்பாகும்.

இலங்கையில் கண்டல் சூழலமைப்புகள், களப்புகள், ஈரநிலங்கள் மற்றும் காடுகள் ஆகியவை உயிர்ப்பல்வகைமைக்கும், மக்களின் வாழ்வாதாரத்திற்கும், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்வதற்கான சமூகங்களின் மீள்திறனுக்கும் முக்கியமானவை.

நாடுகள் வெறுமனே உறுதிமொழிகளை வழங்குவதைக் கடந்து, நீண்டகால சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமூகங்களின் தலைமையிலான முயற்சிகள் மற்றும் சுற்றுச்சூழல் கல்வி ஆகியவற்றில் முதலீடு செய்ய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். மேலும், உயிர்ப்பல்வகைமை தொடர்பான தீர்மானங்களில் இளைஞர்களினதும் உள்ளூர் சமூகங்களினதும் குரல்கள் உரிய முக்கியத்துவத்தைப் பெறுவதுடன், இயற்கையைப் பாதுகாப்பதில் விசுவாசச் சமூகங்களும் முக்கிய பங்காளிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என நம்புகிறேன்."

இம்மாநாட்டில் பங்கேற்கும் ஆங்கிலிக்கன் பிரதிநிதிகள் கடல்சார் சூழலமைப்புகளுக்கான நீதி, அதிக ஆபத்துகளை எதிர்கொள்ளும் சமூகங்களுக்கான நியாயமான நிதியுதவி, நிலையான விவசாய முறைகள் மற்றும் பூர்வீக மக்களின் அறிவுக்கு உரிய அங்கீகாரம் ஆகிய விடயங்களை முன்னிறுத்தவுள்ளனர்.

இலங்கையின் சமூக அடிப்படையிலான சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுபவங்களை சர்வதேச அளவிலான உரையாடல்களுடன் இணைப்பதற்கான வாய்ப்பாக அனுசன் சிவராசா இம்மாநாட்டில் பங்குகொள்கின்றார்.

# பேராசிரியர் ராஜ் சோமதேவா ஒரு சிங்கள பௌத்த தேசியவாதி

## செம்மணி விடயத்தில் சர்வதேச குற்றவியல் விசாரணை அவசியம் என பாராளுமன்றத்தில் வலியுறுத்திய கஜேந்திரகுமார் எம்.பி.





"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிழக்கு மாகாணத் தொல்லியல் தொடர்பான குழுவை நியமித்தபோது, அந்தக் குழுவின் உறுப்பினராக பேராசிரியர் ராஜ் சோமதேவா செயற்பட்டார். ராஜ் சோமதேவா ஒரு சிங்கள, பௌத்த தேசியவாதி ஆவார். இவர் ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே இயங்குகின்றார் என்பது தற்போதைய அவரின் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான அறிக்கை மூலம் வெளிவந்துள்ளது. உள்ளக விசாரணைகள் உண்மைகளை ஒருபோதும் வெளிப்படுத்தாது. அரசு நேர்மையாகச் செயற்பட விரும்புகின்றது என்றால், சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு இணங்க வேண்டும்."

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற நச்சு, அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், "யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாகப் பேராசிரியர் ராஜ் சோமதேவா தனது அறிக்கையின் 17ஆவது பக்கத்தில், சுகாதார விபத்து காரணமாகக் கணிசமான நபர்கள் உயிரிழந்து புதைக்கப்பட்டுள்ளமையுடன் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதைகுழி ஒத்துப்போவதாகவும், அதனை நிராகரிப்பதற்கு எவ்விதமான காரணமும் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அதே பந்தியில், இதுவரை கண்டறியப்பட்டுள்ள உடல்கள் தொடர்பில் நிபுணத்துவ குறைபாடுகள் காரணமாக இன்னும் எத்தனையோ விடயங்கள் செய்ய வேண்டியுள்ள காரணத்தால் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இறுதி முடிவுகளை அறிவிக்க முடியாது என்று குறிப்பிட்டுவிட்டு, சுகாதார விபத்தில் நடந்ததை போன்ற கருத்தையும் பதிவு செய்கின்றார். பேராசிரியர் ராஜ் சோமதேவா எந்த அடிப்படையில் தனது அறிக்கையில் இந்தக் கருத்துக்களைக் குறிப்பிட்டார்?

17 பக்கங்களை உள்ளடக்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிட்ட விபத்து தொடர்பிலும் விபட்டை உறுதிப்படுத்தும் வகையிலும் ஆதாரங்கள் எதனையும் சமர்ப்பிக்காமல், முடிவுக்கு வர முடியாது என்று கூறிக்கொண்டு, குறிப்பிட்ட விடயத்தை அழுத்திக் கூறும் வகையில் குறிப்பிட்டுள்ளார் என்றால், அவரின் நிகழ்ச்சி நிரல் தொடர்பில் கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

இதேவேளை, அவர் இதற்கு முன்னர் மூன்று அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். அவர் தனது தனிப்பட்ட முடிவுகளை அவற்றில் குறிப்பிட்டுள்ளார். முதலாவது அறிக்கையில் பாரிய புதைகுழி என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன், இதற்கு முன்னர் செம்மணி தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் தமிழ்த் தேசியவாதத்தை எதிர்த்த தரப்புகளும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ராஜன் ஹூல் என்பவர் 1999ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கையொன்றில், செம்மணியில் உடல்கள் ஆடைகள் இன்றிப் புதைக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டு முகாம்களில் இருந்து கொண்டுசென்று செம்மணியில் புதைக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், செம்மணி தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்த் தேசியப் பேரவையின் நிலைப்பாடானது, தொல்லியல் நிபுணர் ராஜ் சோமதேவா என்பவர் ஒரு நிகழ்ச்சி நிரலுடன் இயங்குகின்றார் என்பதாகும். இதனை நாங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம். அவருடைய கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பிலும் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

கோட்டாபய ராஜபக்ஷவினால் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் தொடர்பான குழு அமைக்கப்பட்டபோது, பேராசிரியர் ராஜ் சோமதேவவையும் அதில் இணைத்திருந்தார். அவரொரு சிங்கள, பௌத்த தேசியவாதியாவார். அவர் ஒரு நிகழ்ச்சி நிரலில்தான் இயங்குகின்றார் என்பது இப்போது உறுதியாகியுள்ளது.

இதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளை இந்த நாட்டுக்குள் நடத்த முடியாது என்பதனைத் தொடர்ச்சியாகக் குறிப்பிட்டு வருகின்றோம்.

இந்த அரசு நேர்மையாகச் செயற்பட விரும்புகின்றது என்றால், சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு இணங்க வேண்டும். இந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் தனித்துச் செய்யவில்லை. இதனால், சர்வதேச விசாரணைக்கு இணங்காமல் உண்மையைக்கண்டறிய முடியாது. இப்போதாவது அரசு கண்களைத் திறக்க வேண்டும்.

செம்மணியில் கிட்டத்தட்ட 600 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னும் 600 உடல்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பாரதூரமான குற்றம் நடந்துள்ள சம்பவத்தில் அரசு அக்கறை செலுத்த வேண்டும். அரசாங்கம் இனவாதம் இல்லை என நிரூபிப்பதென்றால், முன்னைய ஆட்சியாளர்களில் இருந்து வேறுபட்டவர்கள் என்பதனை நிரூபிப்பதாக இருந்தால், தயவுசெய்து இந்த விடயத்திலாவது சர்வதேச குற்றவியல் விசாரணையைத் தடுக்காமல் இதற்கு இணங்க வேண்டும்." - என்றார்.

# "If we want to change the city, we have to change the Mayor"

## Brad Bradford - A Key Candidate for the Mayor of Toronto

# ரொறன்ரோ மாநகரில் ஆக்கபூர்வமான மாற்றங்களைக் காண வேண்டுமாயின் அதன் மேயரையும் உடனே மாற்றவேண்டும்!

## ரொறன்ரோ மேயர் தேர்தலில் போட்டியிடும் முக்கிய வேட்பாளரான பிராட் பிராட்போர்ட் தெரிவிப்பு!




ரொறன்ரோ மாநகரில் விரைவானதும் ஆக்கபூர்வமானதுமான மாற்றங்களைக் காண வேண்டுமாயின் அதன் மேயரையும் உடனே மாற்றவேண்டும் என நடைபெறவுள்ள ரொறன்ரோ மாநகர மேயருக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் முக்கியமானவரான கருதப்படும் பிராட் பிராட்போர்ட் அவர்கள் தெரிவிததார். சில நாட்களுக்கு முன்னர் கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு வுழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### டொராண்டோவை மாற்ற மேயரை மாற்ற வேண்டும்!

தங்கள் தேர்தல் பிர்சசாரத்தை தொடங்கிய நாள் தொடக்கம் இன்று வரை தாங்கள் பெற்றுக்கொண்ட அனுபவம், வாக்காளர்களின் விருப்பங்கள் மற்றும் தங்களுக்குள்ள ஆதரவு தொடர்பாக பார்வை ஆகியவை பற்றி முதலில் என்னோடு பகிர்ந்து கொள்ளுங்கள் என்ற முதல் கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிராட் பிராட்போர்ட் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவிததார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அழகிய ரொறன்ரோ மாநகரில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துதல், போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், மற்றும் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் ஆகிய மூன்று முக்கிய அம்சங்களில் ரொறன்ரோ மாநகர சபையும் அதன் தலைமையும் உரிய கவனம் செலுத்தத் தவறிவிட்டது. மக்கள் நகரின் அனைத்துப் பகுதிகளிலும் தடுமாற்றங்களை அனுபவிக்கின்றார்கள். எனவேமாநகரில் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமானால், மேயர் பதவியில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று டொராண்டோ மேயர் வேட்பாளர் பிராட் பிராட்போர்ட் (Brad Bradford) தெரிவித்தார்.

"கனடா உதயன்" பிரதம ஆசிரியர் லோகன் லோகேந்திரலிங்கம் நடத்திய மேற்படி நேர்காணலில் வேட்பாளர் பிராட் பிராட்போர்ட் திட்டவட்டமாக பல விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் குற்றம், நெரிசல், வாழ்க்கைச் செலவு: மூன்றிலும் தோல்வியடைந்த நிர்வாகமே கடந்த பல வருடங்களாக ரொறன்ரோ மக்கள் அனுபவித்தார்கள்.

ரொறன்ரோவின் தற்போதைய நிர்வாகச் சூழல், பொதுமக்களின் பாதுகாப்பு, வரவு-செலவுத் திட்ட மறுசீரமைப்பு, சிறு வணிகர்களுக்கான சலுகைகள் மற்றும் வீட்டுவசதி நெருக்கடிகள் குறித்து மேயர் வேட்பாளர் பிராட் பிராட்போர்ட் விரிவாக விளக்கினார்.

ரொறன்ரோ நகரம் உலகின் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட நகரம் என்பதைக் குறிப்பிட்ட பிராட், தேர்தல் பிரச்சாரத்தின்போது மக்கள் குற்றச் செயல் அதிகரிப்பு, வாகன நெரிசல், வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றையே பிரதான கவலைகளாக முன்வைப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

மாநகர நிர்வாகமும் கவுன்சிலர் அலுவலகங்களும் பொதுமக்களின் தேவைகளுக்கு உரிய நேரத்தில் பதிலளிப்பதில்லை என்ற குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த அவர், அதிகாரத்துவத்தில் "இன்று முடியாததை நாளை செய்யலாம்" என்ற மெத்தனப் போக்கு நிலவுகிறது. நான் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், கவுன்சில் மற்றும் மாநகரப் பணியாளர்கள் மத்தியில் வெளிப்படைத்தன்மையையும், முடிவுகளை விரைந்து வழங்கும் பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தையும் கட்டாயமாக்குவேன் என்று குறிப்பிட்டார்.

ரொறன்ரோவில் அதிகரித்து வரும் குற்றச்செயல்கள், வாகனத் திருட்டுகள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்துப் பேசிய அவர், நகரின் முதன்மையான தேவை பொதுப் பாதுகாப்பு என்று தெரிவித்தார்.

முந்தைய மேயர்களைப் போலன்றி, தற்போதைய மேயர் ஒலிவியா சௌ அவர்கள் பொலிஸ் சேவை சபையில் (Toronto Police Services Board) அங்கம் வகிக்காமல் பொறுப்பைத் தவிர்த்துவிட்டதாகக் குற்றம்சாட்டிய பிராட், தான் தேர்ந்தெடுக்கப்பட்டால் நேரடியாகப் பொலிஸ் சேவை சபையில் அங்கம் வகித்து கொள்கை மற்றும் நிதி ஒதுக்கீடுகளை வழிநடத்துவேன் என்றார். உறுதி படத் தெரிவித்தார்.

அவர் தன்னிடம் கேட்கப்பெற்ற அனைத்துக் கேள்விகளுக்கும் உற்சாகமான முறையில் கவனத்துடன் பதிலளித்தார்.

கனடாவின் பிற முக்கிய நகரங்களுடன் ஒப்பிடுகையில் டொராண்டோவில் 100,000 மக்களுக்கு வெறும் 165 களப் பொலிஸாரே உள்ள நிலையில், மேலும் 1,000 களப் பொலிஸ் அதிகாரிகளைப் புதிதாகப் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்த அதிகரிப்பு நகரில் குற்றச் செயலைகளைக் கட்டுப்படுத்த பெரிதும் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பொலிஸ் துணை நிலையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பணிக்குழு ஆகியவற்றைத் தொடர் சிக்கல்கள் நிறைந்த பகுதிகளில் நிறுவ உள்ளதாகவும் குறிப்பிட்டார். எல்லைகள் கடந்து செயல்படும் திட்டமிட்ட குற்றங்களை ஒடுக்க CSIS, RCMP, OPP உள்ளிட்ட பிராந்தியக் காவல் அமைப்புகளை ஒன்றிணைத்துக் கூட்டுப் பணிக்குழு அமைக்கப்படும் என்றும் இதன் மூலம் குற்றம் இழைப்பவர்கள் தங்கள் செயல்களிலிரந்து விலகிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் எமக்கு கிட்டும் என்றும் தெரிவித்தார்.

மேற்படி உதயன் நேர்காணலில் நிதிநிலை நவீனமயமாக்கல் மற்றும் சேவைக் குறைப்பின்றி நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும் விளக்கமளித்த பிராட், "மாநகர வரவு-செலவுத் திட்டத்தை மத்திய மற்றும் மாகாண அரசுகளின் நிதி மேலாண்மைக்கு இணையாக நவீனமயமாக்க உள்ளேன். என்றும் செயல்பாட்டுச் செலவுகளுக்கான நிதியை (Operating budget) மூலதனக் கட்டமைப்புச் செலவுகளுக்குத் (Capital budget) திசைதிருப்பும் வழக்கத்தை நிறுத்தி, உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நீண்டகால குறைந்த வட்டி நிதியுதவியைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் மீதமாகும் சுமார் 250 முதல் 360 மில்லியன் டொலர் தொகையைக் கொண்டு, வரிகளை உயர்த்தாமலும் அத்தியாவசிய சேவைகளைக் குறைக்காமலும் புதிய பொலிஸார் நியமனம் உள்ளிட்ட களப் பணிகளுக்கு நிதி ஒதுக்க முடியும்," என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, தமிழ்ச் சமூகம் உள்ளிட்ட ஏனைய சமூகங்கள் சார்ந்த சிறு வணிகர்களுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்ததுடன், ஸ்கார்பரோ, மார்க்கம் வீதி மற்றும், லோரன்ஸ் வீதி கிழக்கு மற்றும் கென்னடி வீதி ஆகியன அமைந்திருக்கும் பகுதிகளில் வாழும் புலம்பெயர்ந்த மற்றும் தமிழ் தொழில்முனைவோரின் பங்களிப்பைப் பாராட்டிய அவர், சிறு வணிகங்களுக்கான தடைகளை அகற்றவும் அவர்களின் வர்த்தகம் பெருகி வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையிலும் செயற்பாடுகளை அதிகரிக்கவும் உறுதியளித்தார்.

மேலும், டவுன்டவுன் என்று அழைக்கப்படும் பகுதிகளில் உள்ள வர்த்தகக் நிறுவனங்களுக்கு இணையான வரியைச் சிறு வணிகங்கள் மீது சுமத்துவதைத் தவிர்க்க, தாம் முன்னெடுத்த சிறு வணிக வரிப் பிரிவின் கீழ் சொத்து வரியில் மேலும் 25% குறைப்பும், தொழில்துறைப் பிரிவினருக்கு 25% குறைப்பும் அமுல் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், வணிக உரிமங்கள் மற்றும் கட்டட அனுமதிப் பத்திரங்கள் பெறுவதில் ஏற்படும் தாமதங்கள் வணிகர்களின் மூலதனத்தை வீணடிக்கின்றன என்று சுட்டிக்காட்டிய அவர், தேவையற்ற இரட்டை உரிம நடைமுறைகளை ரத்து செய்து, விரிவாக்கம் செய்யும் நிறுவனங்களுக்கு விரைவு அனுமதிகள் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார். இதனால் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட விரும்புபவர்கள் மிகவும் உற்சாகத்துடன் செயற்படுவார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பழைய கட்டடங்களில் வாழும் வாடகைக் குடியிருப்பாளர்களின் சவால்கள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பாக உதயன் பிரதம ஆசிரியர் அவர்கள் வினாவிய போது அதற்கு பதிலளித்த ரொறன்ரோ மாநகர மேயருக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் முக்கியமானவரான கருதப்படும் பிராட் பிராட்போர்ட் அவர்கள் பாதுகாப்பை உறுதி செய்ய 'RentSafeTO' திட்டம் மற்றும் நகராட்சித் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகள் (Bylaw enforcement) தீவிரப்படுத்தப்படும் என்றும் உறுதியளித்தார்.

அத்துடன், புதிய நகராட்சி குடிநீர் கட்டமைப்புத் திட்டத்தின் மூலம் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 300 டொலர் வரை சேமிப்பு ஏற்படுத்தப்பட்டு, அது வாடகைதாரர்களுக்கும் நேரடியாகக் கிடைக்கும் வகையில் மாகாண அரசுடன் இணைந்து வழிவகை செய்யப்படும் என்றும் கூறினார்.

பதவியேற்ற முதல் ஆண்டில் எவ்வாறான திட்டங்களை நிறைவேற்றுவீர்கள் என்று பிரதம ஆசிரியர் முன்வைத்த கேள்விக்குப் பதிலளித்த பிராட், தமது பதவிக்காலத்தின் தொடக்கத்தில் மக்கள் காணக்கூடிய மாற்றங்களாகப் பின்வருவனவற்றை உற்சாகத்துடன் பட்டியலிட்டார்:

முதல் 100 நாட்களில் எக்ளிண்டன் ஈஸ்ட் LRT: ஸ்கார்பரோவின் போக்குவரத்துத் தேவைகளைப் புறக்கணித்த முந்தைய அணுகுமுறையை மாற்றி, பதவியேற்ற 100 நாட்களுக்குள் எக்ளிண்டன் ஈஸ்ட் LRT (Eglinton East LRT) திட்டத்திற்கு மாகாண மற்றும் மத்திய அரசுகளின் நிதியுதவியைப் பெற்று, பதவிக்கால இறுதிக்குள் கட்டுமானப் பணிகளைத் தொடங்குதல். முதலாவதாக செயற்படுத்தப்படும் என்றும்,

சொத்து வரி நிறுத்திவைப்பு (Tax Freeze): கடந்த மூன்றரை ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கடுமையான வரி உயர்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, சொத்து வரியை நிறுத்திவைத்தல்.

15 ஆண்டுகளுக்குப் பின் விரிவான தணிக்கை: மாநகர சபையின் வீண் செலவுகளைக் கண்டறிய ஒவ்வொரு வரியையும் தணிக்கை செய்து (line-by-line review) நிதி இழப்புகளைத் தடுத்தல்.

போக்குவரத்து நெரிசல் குறைப்பு: கனடியத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிக்னல்களை ஒருங்கிணைத்து, வாகன நெரிசலைக் குறைக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். என்று சுட்டிக்காட்டினார்.

இவ்வாறாக ரொறன்ரோ மாநகர மேயருக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் முக்கியமானவரான கருதப்படும் பிராட் பிராட்போர்ட் அவர்கள் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு வழங்கிய பேட்டியில் ஆணித்தரமான கருத்துக்களை முன்வைத்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

*- UTHAYAN LJI Journalist Ganesh*










இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524




29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1594 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 23, 2026

# "செம்மணி" எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்ள, 30 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று தொடர்புடைய கதைகளை அறிய வேண்டும்.

## ஒட்டாவாவில் "செம்மணி கொலைக்குழிகளுக்கான பொறுப்புக்கூறல் வலியுறுத்தும் நிகழ்வில் உரையாற்றிய இங்கிலாந்தின் லண்டன் பல்கலைக் கழக கலாநிதி மரியோ அருள்தாஸ் விபரிப்பு!

ஒட்டாவா பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற "செம்மணி கொலைக்குழிகளுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் நினைவு நிகழ்வில் பிரதான உரையாற்றிய இங்கிலாந்தின் லண்டன் பல்கலைக்கழக **School of Oriental and African Studies** பிரிவில் கலாநிதிப் பட்டம் பெற்றவருமான கலாநிதி மரியோ அருள்தாஸ் மேற்கண்டவாறு தனது உரையில் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)








# நேர்த்தியாக நடைபெற்ற "லத்திகா புறடக்ஷன்ஸ்" வழங்கி பாடகர் கிறிஸ் மேடையில் மகிழ்வித்த KRISH - Live in Toronto – 2026





ரொறன்ரோ மாநகரில் அண்மைக் காலப்பகுதியில் பல இசை நிகழ்ச்சிகளை நடத்தி புகழ்பெற்ற "லத்திகா புறடக்ஷன்ஸ்" நிறுவனம் கடந்த 17-10-2026 அன்று ஒஷ்ஷாவா நகரில் அமைந்துள்ள மண்டபத்தில் நடத்திய **KRISH - Live in Toronto**-2026 "இசையின்பம்"! நிகழ்ச்சி நேர்த்தியாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

ரசிகர்கள் நிறைந்த அந்த மண்டபத்தில் பாடகர் கிறிஸ் மேடையில் பிரபல திரைஇசைப் பாடகி தென்னிந்தியாவின் சௌந்தர்யாவுடனும் கனடிய ஆண் மற்றும் பெண் பாடக பாடகிகளோடும் தோன்றி கனடிய இசைக்குழுவினரின் அபாரமான பின்னணி இசையோடும் மகிழ்வித்து **KRISH - Live in Toronto-2026** இசை நிகழ்ச்சியை ஒரு "உச்சத்தைத் தொட்ட" விழாவாக உயர்த்தி கனடிய ரசிகர்களின் இதயங்களில் இடம்பிடித்தார்.

# ரொறன்ரோ நகரசபைத் தேர்தல் ஸ்காபுறோ வடக்கு வட்டாரம் 23ல் வெற்றி வாய்ப்புள்ள வேட்பாளராக பிரவினா சத்தியானந்தம்

ரொறன்ரோ நகரசபைத் தேர்தலில் ஸ்காபுறோ வடக்கு வட்டாரம் 23ல் வெற்றி வாய்ப்புள்ள வேட்பாளராக போட்டியிடும் பிரவினா சத்தியானந்தம் அவர்களுக்கு வருகின்ற 26ம் திகதி உங்கள் வாக்குகளை அளித்து ஆதரிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

முன்கூட்டிய வாக்களிப்பில் அனேக தமிழர்கள் தங்கள் வாக்குக்களை பிரவினா சத்தியானந்தம் அவர்களுக்கு பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒக்டோபர் 26ம் திகதி திங்கள் காலை 10:00 முதல் 8:00 மணிவரை உங்கள் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று 107 ம் இலக்கத்திற்கு நேராக வாக்களிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.-

இங்ஙனம்: பிரவினா சத்தியானந்தம்- தேர்தல் பிரச்சாரக் குழு- 647-354-0618



# எதிர்வரும் சனி – ஞாயிறு 24, 25ம் திகதிகளில் ஸ்காபுறோவில் "ரொறன்ரோ தமிழ் புத்தக அரங்கு" கண்காட்சிக்கு அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள்

எதிர்வரும் சனி - ஞாயிறு 24, 25ம் திகதிகளில் ஸ்காபுறோவில் நடைபெறும் "ரொறன்ரோ தமிழ் புத்தக அரங்கு" கண்காட்சிக்கு கலந்து கொள்ளுமாறு **Canada Tamil Books Stall** அழைக்கின்றது **"Canada Tamil Books Stall "**ரொறன்ரோ தமிழ் புத்தக அரங்கு" எதிர்வரும் 24, 25ம் திகதிகளில் (சனி - ஞாயிறு) ஸ்காபுறோவில் நடைபெறுகின்றது.

**Toronto** புத்தக அரங்கில் இங்கிலாந்தில் வாழும் எழுத்தாளர் சுப்பிரமணியம் லோகநாதன் எழுதிய "முதுமை வாழ்வின் முழுமை" என்னும் நூலும் அறிமுகம் செய்யப்பெற்று பின்னர் வாசகர்களின் கரங்களுக்கு கிட்டும் வகையில் வழங்கப்படவுள்ளது.



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · FIRST NATIONAL FINANCIAL LP · TD Canada Trust · Manulife · NATIONAL BANK · Desjardins · RFA · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN உதயன்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

Issue: 1594

October 23, 2026


# Brad Bradford for Mayor



## The Three Cs

Fight Crime
Fix Congestion
Reduce Your Costs

- குற்றச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கை
- பயண நெரிசலைச் சீராக்கும் முயற்சிகள்
- வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வழி

உண்மையான மாற்றம்!
உண்மையான பெறுபேறுகள்!

#5 BRAD BRADFORD

On the ballot

ஒக்டோபர் 26 திங்கட்கிழமை அன்று வாக்களியுங்கள்!